பக்கங்கள்: 12

காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஆனி 09 திங்கட்கிழமை 24.06.2019 | கதிர் 231

இனி இது ரகசியம் அல்ல!

கிழக்கில் இப்போது ஒரு விநோத மான அரசியல் சூழ்நிலை ஏற்பட் டிருப்பதாக அங்கிருக்கும் எமது பத்திரிகை நண்பர்கள் கூறுகின் றார்கள்.

கிழக்கில் – குறிப்பாக அம்பாறை, மட்டக்களப்புப் பிரதேசங்களில் – தமிழர்களுக்கும் பக்கம் 02 »

# நாடு பிளவுபடாமல் தடுக்க ஒரே வழி அதியுச்ச அதிகாரப் பகிர்வு மட்டுமே!

## திருமலையில் சுட்டிக்காட்டினர் சம்பந்தன்




திருமலை, ஜூன் 24

அதியுச்ச அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டால், நாட்டை பிளவுப் படுத்தவேண்டிய தேவை இருக்காது என்று தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார். பக்கம் 11 »

# தமிழர் தீர்வுக்கு இந்தியா பொறுப்பேற்கவேண்டும்

## சமஷ்டியே தீர்வாகவேண்டும் என்றும் வலியுறுத்துகின்றார் செல்வம் எம்.பி.



வவுனியா, ஜூன் 24

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவின் பங்கு இருக்கவேண்டும். தீர் வுக்கான முழுமையான பொறுப்புக்கூறலை இந்தியா வழங்கவேண்டும். தீர்வு என் பது சமஷ்டியாகத்தான் இருக்க வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தியுள் ளார் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலை வருமான செல்வம் அடைக் கலநாதன். பக்கம் 11 »

# முற்றாகக் கைவிடப்பட்ட கல்முனைப் போராட்டம்!



அம்பாறை, ஜூன் 24

கல்முனை வடக்கு உப பிரதேச செய லகத்தைத் தரமுயர்த்தக் கோரி ஆரம்பித்த உண்ணாவிரதத்தைப் போராட்டக்காரர்கள் நேற்றுக் காலை முதல் பக்கம் 11 »

# மைத்திரி, ரணில் உடன் பதவி விலக வேண்டும்!

## அநுரகுமார வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 24

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தத் தமது பதவிகளை உடனடியாகத் துறக்க வேண்டும். பக்கம் 11 »

# மைத்திரி இதுவரை வாய் திறக்கவில்லை

## மஹிந்தவுக்கு வந்த சந்தேகம்



கொழும்பு, ஜூன் 24

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிடுவது தொடர்பான அறிவிப்புக்களை அவருடன் இருப்பவர்களே முன்வைத்து வருகின்றனர். அவரோ இதுவரை எந்த வொரு அறிவிப்பையும் விடுக்கவில்லை யென பக்கம் 11 »

# 18ஆவது, 19 ஆவது திருத்தங்கள் இரத்துச் செய்யப்படவேண்டும்

## பிரதமர் ரணில் முன்னிலையில் மைத்திரிபால அதிரடிக் கருத்து



கொழும்பு, ஜூன் 24

அரசமைப்பின் 18 ஆம், 19 ஆம் திருத் தங்கள் இரத்துச்செய்யப்படவேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரி வித்துள்ளார். பக்கம் 02 »

# முடிவுக்கு வருகின்றதாம் ரணிலின் அரசியல் வாழ்வு

## மஹிந்த அணியின் ஆருடம் இது

கொழும்பு, ஜூன் 24

பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவின் அரசியல் வாழ்வு இன்னும் சில மாதங்களில் முடிவுக்கு வரு கின்றது. இனிமேலாவது அவர் வீட்டில் நன்றாகத் தூங்கட்டும். பக்கம் 11 »

# முஸ்லிம் அமைச்சர்கள் மீண்டும் பணத்துக்காகப் பதவியேற்றனர்

## வெட்கம் கெட்ட செயல் என்கிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 24

முஸ்லிம் அமைச்சர்கள் தாமாகப் பதவி விலகியமை யும், மீண்டும் பதவியை ஏற்றுக்கொண்டமையும் பணத் திற்காகவே என்பது வெட்கப்படவேண்டிய விடயமாகும் என ஜே.வி.பி. நாடாளுமன்ற பக்கம் 02 »

# தமிழரின் பொறுமை முடிவுக்கு வந்துள்ளது

## கூறுகின்றார் மனோ கணேசன்



கொழும்பு, ஜூன் 24

பேச்சுக்கு குழு நியமனம் என்பதெல்லாம் காலத்தை வீணடிக்கும்செயல்என்பதைக் கிழக்கு மக்கள் உணர்ந்துவிட் டனர் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார். பக்கம் 11 »

# யாழ்.மாவட்டத்தில் ரூபா 550 கோடியில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுப்பு

## அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 24

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பொறுப்பின் கீழ் வரும் தேசிய கொள்கை கள், பொருளாதார விவகாரங்கள், வடக்கு அபிவிருத்தி, மீள்குடியேற்றம், புனர் வாழ்வளிப்பு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் ஊடாக மட்டும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சுமார் 550 கோடி ரூபாவில் பக்கம் 11 »

# இந்த அரசிலும் தமிழர்களுக்கு தீர்வு கிட்டும் சாத்தியமில்லை

## நம்பிக்கையிழந்த சித்தார்த்தன் எம்.பி.



வவுனியா, ஜூன் 24

தற்போதைய சூழலில் இந்த அரசிலும் தமிழ் மக்களுக்கான தீர்வு சாத்தியம் பக்கம் 11 »

# விக்கியின் கீழ்த்தர வார்த்தைக்கு கூட்டமைப்பு செவி கொடுக்காது

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 24

**அரசின் வாக்குறுதிகளை எமது மக்கள் முன்னிலையில் சென்று கூறுவது மாமா வேலை அல்ல. விக்கினேஸ்வரனின் கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களுக்குக் கூட்டமைப்பு செவி கொடுக்காது எனத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.**

கல்முனைவடக்குபிரதேசசபை விவாகரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு மாமா வேலைசெய்கின்றதுஎனவடக்கின் முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் பகிரங்கமாக விமர்சித்திருந்த நிலையில் அதற்குப் பதிலளிக்கும்போதே சுமந்திரன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்மக்களின்பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதுமே முன்னின்று செயற்பட்டு வருகின்றது. இன்றுவரை வடக்கு – கிழக்கில் தமிழ் மக்கள் பெற்றுக் கொண்டுள்ள தமது உரிமைகளுக்கு எமது தலையீடுகள் பிரதான காரணம் என்பதை மறந்து விடக்கூடாது.

விக்கினேஸ்வரன் தனது அரசியல் சுயலாபங்களுக்காக எந்தளவு கீழ்மட்டத்தில் வீழ்ந்துள்ளார் என்பது நன்றாகத் வெளிப்பட்டுள்ளது.

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் முஸ்லிம் தலைமைகள் அநாவசியமாகத் தலையிட்டுக் குழப்பங்களை ஏற்படுத்தி வருகின்றன என்றே நாம் கருதுகின்றோம். கல்முனைவடக்கு நிலத்தொடர்பு கொண்ட பிரதேசம். அதுமட்டும் அல்ல, இது தமிழர்கள் வாழும் பகுதி. இதில் புதிதாக எல்லை நிர்ணயம் ஒன்றினைச் செய்ய வேண்டிய எந்தவித தேவையும் இல்லை. கல்முனை தெற்கு பிரதேச செயலகம் நிலத்தொடர்பு இல்லாதது. இதில் தான் எல்லை நிர்ணயங்கள் செய்தாக வேண்டும். இது அவர்களின் பிரச்சினை, இதனை தீர்க்கத் தெரிவுக்குழு அமைத்துக் கொள்வதும் நடவடிக்கை எடுப்பதும் அவர்களின் பிரச்சினை. ஆனால் கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் அநாவசியமாக முஸ்லிம் பிரதிநிதிகள் தலையிட்டு தமிழர்களின் பிரச்சினைகளைக் குழப்புவது கண்டிக்கத்தக்கது.

கல்முனை தெற்குப் பிரதேச செயலகத்திற்கான உரிமைகளை பெற்றுக்கொள்வதற்கு முஸ்லிம்கள் போராடுவதில் நியாயம் இருக்கிறது. ஆனால் தமிழர்களுக்கு கொடுக்க வேண்டாம் என கூறுவதற்கு அவர்களு எந்த அதிகாரமும் இல்லை. இந்த விடயத்தில் முஸ்லிம் பிரதிநிதிகள் மத்தியில் நாம் கண்டிப்பாக தெரிவித்து வருகின்றோம்.

விரைவில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கையெடுக்கப்பட்டு வருகிறது. அடுத்த வாரத்தில் இருந்து கணக்காய்வாளர் கல்முனை வடக்கு செயலகத்தில் தனது கடமைகளை ஆரம்பிப்பார் – என்றார். (ஐ)

# ஆட்சியை கவிழ்ப்பதற்கு எதிரணியினர் கங்கணம்

## ராஜித கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 24

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஆட்சியைஇந்தஆண்டுடன்கவிழ்த்துவிடலாம் எனஎதிரணிதீவிரம்காட்டிவருவதாகஅமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

எனினும் அவர்களின் எதிர்பார்ப்பு தோல்வியடைந்துள்ளது எனத் தெரிவித்த அமைச்சர் ராஜித, ஆட்சியைக் கவிழ்ப்பதற்காகவே நாட்டில் இனவாதம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை உருவாக்குவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் காணப்படும் நெருக்கடி சூழ்நிலையில் எதிர்வரும் தேர்தலில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் வேட்பாளராகச் செயற்பட உள்ளனர்.

அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் பிரபல்யமான அமைச்சர்கள் யாராவது இருந்தால் அவர்களுக்கு எதிராகச் செயற்படுவதே இவர்களின் பிரதான நோக்கமாகக் காணப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஆட்சியை இந்த ஆண்டுடன் கவிழ்க்க அரசுக்கு எதிராக எவ்வளவு சூழ்ச்சி செய்தாலும் சர்வதேச உதவிகள் எமக்கு கிடைத்த வண்ணமே உள்ளன.

ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகள் பொருளாதார ரீதியில் பாரிய உதவிகளை வழங்கியுள்ளன. இந்த இரண்டு நாடுகளும் குறைந்த வட்டி வீதத்திலேயே எமக்கு கடன் உதவிகளை வழங்கியுள்ளன.

ஆகவே இந்த அரசைப் பற்றி எமது மக்கள் என்ன கூறினாலும் சர்வதேசம், கடந்த அரசை விட தற்போதைய அரசைச் சிறந்த அரசாகக் கருதுகிறது – என்றார். (ஐ)

### 18ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடந்த தேசிய வீடமைப்பு அதிகார சபையின் நிகழ்வில் பிரதமர் ரணில் முன்னிலையில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பிரதமர் அவர்களே! எமது அரசுக்கு நான்கரை வருட காலம் முடிந்து இன்னும் நான்கு மாதங்களில் தேர்தல் வரவுள்ளது. நான்கரை வருடங்களில் நாம் நன்றாக நடந்தோமா, நம்மால் தவறவிடப்பட்ட இடங்கள் என்ன என்பதை நாம் தேடிப்பார்க்க வேண்டும். இந்த நான்கரை வருடங்களில் நாம் செயற்பட முடியாமைக்குப் பிரதான காரணமாக எதுவும் இருக்குமானால் அது 19 ஆவது திருத்தம்தான். 19 ஆவது திருத்தம் வந்திராவிடில் இது ஒரு சிறந்த அரசாக இருக்கும்.

நானும்பிரதமரும் இரண்டுபக்கங்களுக்கு இழுக்கிறோம் என்று மக்கள் மத்தியில் ஒரு குற்றச்சாட்டு உள்ளது. அந்த நிலைமை 19 ஆவது திருத்தத்தினால்தான் ஏற்பட்டது.18 ஆவது திருத்தத்தை மஹிந்த கொண்டு வந்தார். அது கட்டளையிடும் வகையிலான ஒரு திருத்தம். எனவே நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் தனிநபர்கள் தொடர்பான பிரச்சினை அல்ல இங்கு அரசமைப்புப் பிரச்சினையே உள்ளது. அரசமைப்பின் 18 ஆவது, 19 ஆவது திருத்தங்கள் ரத்துச் செய்யப்பட்டு இல்லாமலாக்கப்பட்டால் நாட்டின் மக்கள் நல்லதொரு ஆட்சியை எதிர்பார்க்க முடியும் – என்றார். (ஐ)

# 19 ஆண்டுகள் சிறையில் இருந்த தமிழ் அரசியல் கைதி மரணம்!

கொழும்பு, ஜூன் 24

நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதி முத்தையா சகாதேவன் நேற்று உயிரிழந்துள்ளார்.

லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட கொழும்பு – தெமட்டகொட பகுதியைச் சேர்ந்த முத்தையா சகாதேவன் (வயது–61) சுகவீனம் காரணமாக நேற்று முன் தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த 19 வருடங்களாக அரசியல் கைதியாகச் சிறையில் இருந்த இவருக்கு எதிரான வழக்கு இழுத்தடிக்கப்பட்ட நிலையில் உள, உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளார். (ஐ)

### முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அத்துடன், மக்கள்நலனுக்காக அன்றி இன்று நாட்டில் பணத்திற்காக அரசியலில் ஈடுபடும் அரசியல்வாதிகளே அதிகமாக இருக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பதவி விலகிய முஸ்லிம் அமைச்சர்களில் இருவர் மீண்டும் பதவியேற்றுக் கொண்டமை குறித்து விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போதைப்பொருள் வியாபாரம் செய்பவர்களோ, ஊழல் மோசடிகளில் ஈடுபடுபவர்களோ ஜே.வி.பி.யில் இல்லை. அவை ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், பொதுஜன முன்னணிக்கும் உரித்தானவை.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களில் அகப்படுபவர்களும் கைது செய்யப்படுபவர்களும் இந்தக் கட்சியின் ஆதரவாளர்களே. ஆனால், அவர்கள் எமக்கு சேறு பூசுவதற்கு முயற்சிக்கின்றனர்.

இவ்வாறான தலைவர்களைத் தெரிவு செய்த மக்களும் இதற்கு பொறுப்புக் கூறவேண்டும். நாட்டின் ஜனநாயகத்தைக் கட்சிகளுக்குப் பகிர்ந்தளிப்பது தவறாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன முன்னணி என்று வெவ்வேறு கட்சிகளாக இருந்தாலும் இவர்கள் அனைவரும் ஊழல் மோசடி செய்வதில் ஒரே அணியாகவே செயற்படுகின்றனர்.

இரகசிய ஒப்பந்தங்கள் மூலம் நாட்டை வெளிநாடுகளுக்கு விற்பதே இவர்கள் அனைவரினதும் நோக்கமாகும். இவை மாத்திரமன்றி, இனவாத அரசியலிலும் ஈடுபடுகின்றனர். சிலர் பணத்திற்காக அரசியல் செய்கின்றனர்.

அமைச்சுப் பதவிகள் கூட பணத்திற்காகவே பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இன்று தானாகப் பதவி விலகுவதும், மீண்டும் பதவி ஏற்றுக் கொள்வதும் பணத்திற்காக என்பதே உண்மையாகும். இது வெட்கப்பட வேண்டிய விடயமாகும் – என்றார். (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களவர்களுக்கும் இடையில் ஏற்பட்டு வரும் இணக்கம் புதிய அத்தியாயம் ஒன்றைத் திறக்கும் என்று சில அரசியல் விமர்சகர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

வடக்கு மாகாணசபைக்கும், கிழக்கு மாகாண சபைக்கும் அதிக அதிகாரங்களை – குறிப்பாக காணி அதிகாரங்களை – வழங்க வேண்டும் என்ற கருத்து நிலைப்பாடு சிங்கள, பௌத்த தரப்புகளுக்கு வந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

வடக்கு எப்படியிருந்து விட்டுப் போகட்டும், கிழக்கில் தமிழர்களும் சிங்களவர்களும் சேர்ந்து மாகாணசபையை ஒன்றுபட்டு நிர்வகிக்க வேண்டும், காணி அதிகாரங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்றெல்லாம் புதிய சிந்தனை – எண்ணம் – நிலைப்பாடு – விசேடமாக பௌத்த, சிங்களத் தரப்புகளுக்கு ஏற்பட்டிருப்பதாக சில பொறுப்புள்ள அவதானிகள் கூறுகின்றனர்.

கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்துவதற்காக சிங்கள பிக்கு ஒருவரே சாகும் வரை உண்ணாவிரதத்தில் குதித்த நிலைமையில், கிழக்கு மாகாண சபைக்கு காணி அதிகாரம் உட்பட அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று தமிழரும் சிங்களவரும் சேர்ந்து போராட்டம் நடத்தும் நிலைமை விரைவில் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கின்றனர் அவர்கள்.

கல்முனைப் போராட்டத்துக்குத் தங்களின் தார்மீக ஆதரவை வழங்குவதற்காக அங்கு சென்றிருந்த வடக்கு மாகாண சபையின் முன்னாள் அமைச்சர் அனந்தி சசிதரன், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரை அங்கு வந்திருந்த பொதுபலசேனவின் பொதுச்செயலாளர் வண.கலகொட அத்தே ஞானசார தேரர் தனியே அழைத்துப் பேசியிருந்தார்.

அப்போது, இலங்கை முழுவதும் தமிழரும், சிங்களவரும் சேர்ந்து – ஒன்றிணைந்து – அவசரமாகக் களமிறங்க வேண்டிய பொதுப் பிரச்சினைகள் பல இருக்கின்றன, அதற்குத் தயாராகுங்கள் என்று மூவரையும் விநயமாக வேண்டிக் கொண்டாராம் ஞானசாரதேரர்.

ஒரு காலத்தில் கிழக்கு மாகாண சபையில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றிய தமிழ்க் கூட்டமைப்பு, எங்கள் ஆதரவுடன் மாகாண அரசை அமையுங்கள், முதலமைச்சர் பதவியிலிருந்து முழு அமைச்சர் பதவிகளையும் நீங்களே வைத்திருக்கலாம் என்று கூறியபோது, அதனை நெற்றிப் பொட்டில் அடித்தமை போல நிராகரித்தது முஸ்லிம் தரப்பு. சிங்களக் கட்சிகளுடன் போய் இணைந்து கொண்டு முதலமைச்சர் பதவியையும் ருசித்தது.

இப்போது நிலைமை மாறி விட்டது. சிங்களத் தரப்புகளின் ஆதரவுடன் கிழக்கில் ஒரு தமிழரே இனிமேல் முதலமைச்சர் என்றும் கூட ஒரு கணிப்பீடு – எதிர்பார்ப்பு – இப்போதே துளிர்விடத் தொடங்கி விட்டதாகவும் கருத்துகள் கூறப்படுகின்றன.

அதுதான் களநிலைவரம் என்றால் தமிழர்களைப் பொறுத்த வரை அது நல்ல முன்னேற்றம் தான்...!

- மின்னல் -

# வவுனியாவில் நடைபெற்ற புளொட் பேராளர் மாநாடு





வவுனியா, ஜூன் 24

வவுனியாவில் தமிழீழ விடுதலை கழகத்தின் (புளொட்) அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் 9 வது பேராளர் மாநாடு நேற்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கட்சித் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் நடைபெற்றது.

வவுனியா கோவில்குளம் சந்திக்கு அருகில் அமைந்துள்ள ஆதி திருமண மண்டபத்தில் நடைபெற்ற பேராளர் மாநாட்டில் வடக்கு – கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த மாவட்டப் பொறுப் பாளர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், நகரசபை உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

புலம்பெயர்ந்த நிலையில் செயற்பட்டு வந்த தமிழீழ விடுதலை கழகத்தின் உறுப்பினர்களும் இந்தப் பேராளர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் மங்கல விளக்கேற்றியதை தொடர்ந்து, உயிரிழந்த கட்சிப்போராளிகளுக்கு மௌன அஞ்சலியுடன் பேராளர் மாநாடு ஆரம்பமாகியிருந்தது.

புளொட் அமைப்பின் 9ஆவது பொதுச் சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பல்வேறு அமைப்புக்களுக்கு வவுனியாவில் நிதி ஒதுக்கீடு

வவுனியா மாவட்ட பல்வேறு அமைப்புக்களுக்கு கிராமிய அபிவிருத்திக்காகக் கம்பெரலிய வேலைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதிக்கான கடிதம் வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட தமிழரசுக் கட்சியின் தாயகம் அலுவலகத்தில் கடந்த 21ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் இடம் பெற்றது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜாவின் கம்பெரலிய வேலைத் திட்டம் பகுதி இரண்டின் நிதியொதுக்கீட்டில் வவுனியா மாவட்ட 113 அமைப்புக்களுக்கு 4 கோடி 60 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதற்கான கடிதம் அந்தந்த அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா, தமிழரசுக் கட்சியின் வவுனியா மாவட்டத் தலைவர் ப.சத்தியலிங்கம், வவுனியா வடக்குப் பிரதேசசபை தவிசாளர் ச. தணிகாசலம், வவுனியா வடக்கு பிரதேசசபை உறுப்பினர்கள், வவுனியா தெற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள், வவுனியா நகர சபையின் உறுப்பினர்கள், தமிழரசு கட்சியின் வவுனியா மாவட்ட உறுப்பினர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

## தேசிய போதை ஒழிப்பு வாரம்; யாழ்ப்பாணத்திலும் விழிப்புணர்வு

### யாழ். அரச அதிபரின் ஏற்பாட்டிலும் நிகழ்வுகள்

நேற்றைய தினம் 23 ஆம் திகதி முதல் எதிர்வரும் முதலாம் திகதி வரை தேசிய போதை ஒழிப்பு வாரம் ஜனாதிபதி செயலகத்தினரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையொட்டி யாழ் மாவட்ட செயலகமும் விழிப்புணர்வு நிகழ்வுக்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது. இங்கு நடைபெறவுள்ள விழிப்புணர்வு வாகனப் பேரணி, போதை ஒழிப்புக்கு எதிரான பலூன்கள் பறக்கவிடுதல், விழிப்புணர்வு நடைபவனி போன்றவை குறித்து யாழ். அரச அதிபர் நா. வேதநாயகன் அறிவித்துள்ளார்.

* விழிப்புணர்வு வாகனப் பேரணி :

ஜனாதிபதியின் போதையற்ற தேசத்தை உருவாக்குவதற்கும் அந்தச் சிந்தனைக்கு வலுச் சேர்க்கும் வகையிலும் –

கிளிநொச்சி, கூட்டுறவு மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள போதை ஒழிப்பு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நாளை 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ் மாவட்டச் செயலகத்திலிருந்து 50 விழிப்புணர்வு வாகனப் பேரணி அன்றையதினம் காலை 8.30 மணிக்குப் புறப்படவுள்ளது.

* போதை ஒழிப்புக்கு எதிரான பலூன்கள் பறக்கவிடுதல் –

யாழ் மாவட்டச் செயலகத்தில்நாளை மறுதினம் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 08.30 மணிக்கு போதை ஒழிப்புக்கு எதிரான பலூன்கள் பறக்கவிடப்படவுள்ளன

* விழிப்புணர்வு நடை பவனி –

யாழ் மந்திய பேருந்து நிலையத்திலில் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு போதை ஒழிப்பு விழிப்புணர்வு நாடகம் நடைபெற்று அதனைத்தொடர்ந்து காலை 8.45 மணிக்கு விழிப்புணர்வு நடை பவனி ஆரம்பிக்கப்பட்டு மாவட்டச் செயலகத்தில் நிறைவடையவுள்ளது. (இ)

# ஐ.தே.கவுக்குள் மோதல் உச்சம்!

### ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் முரண்பாடு



கொழும்பு, ஜூன் 24

ஜனாதிபதிவேட்பாளர் விவகாரத்தால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதைக் கட்சியின் மத்திய செயற்குழு அதிகாரபூர்வமாக அறிவிக்கும்வரையில் அது குறித்து கற்பனை அடிப்படையில் கட்சி உறுப்பினர்கள் கருத்துகளை வெளியிடக்கூடாது எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்திருந்தார்.

எனினும், அமைச்சர்களான தலதா அத்துக்கோரள, சந்திராணி பண்டார, அஜித் பி பெரேரா ஆகியோர், சஜித் பிரேமதாஸவே தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என அறிவித்து வருகின்றனர்.

இதற்கு ஐ.தே.கவின் உபதலைவரான ரவி கருணாநாயக்க கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். இத்தகைய அறிவிப்புகள் கட்சியின் கூட்டுப்பொறுப்பை மீறும் செயலாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ள அவர், தந்தையின் பெயரை வைத்து அரசியல் நடத்தும் காலம் மலையேறிவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் ஐக்கிய தேசியக்கட்சி இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை என அதன் பொதுச் செயலாளர் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இதனால் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து ஐ.தே.கவுக்குள் கருத்து முரண்பாடு வெடித்துள்ளது. (ஐ)

# எதிரணியினரை நம்பாதீர்கள் சுயபுத்தியில் செயற்படுங்கள்!

### மைத்திரிக்கு ரவி அறிவுரை

கொழும்பு, ஜூன் 24

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது எதிரணியினரை நம்பாமல் தனது சுயபுத்தியில் செயற்பட வேண்டும். அப்போதுதான் அவரும் அரசும் ஒத்துழைத்துச் செயற்பட முடியும்.

– இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவரும் அமைச்சருமான ரவி கருணாநாயக்க.

அவர் மேலும் கூறுகையில் –

2015ஆம் ஆண்டு நல்லாட்சியின் ஆரம்பத்தில் தேசிய அரசு அமைக்கப்பட்டது. அந்தத் தேசிய அரசு கடந்த 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி வரை ஓரணியில் பயணித்தது.

ஆனால், ஆட்சியைக் கவிழ்க்க மஹிந்த அணியினர் வகுத்த சதிக்குள் ஜனாதிபதி மைத்திரி சிக்கியதால் அதிலிருந்து மீண்டு வரமுடியாமல் 'ஒக்ரோபர் 26 அரசியல் சூழ்ச்சி'யை அவர் அரங்கேற்றினார். ஆனால், அவரினதும், மஹிந்த அணியினரினதும் கூட்டுச் சூழ்ச்சி வெற்றியளிக்கவில்லை.

52 நாள்களில் அந்தச் சூழ்ச்சியை ஐக்கிய தேசியக் கட்சி முறியடித்தது. அதற்கு ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பெரிதும் ஒத்துழைத்தன.

அரசியல் சூழ்ச்சியை ஜனாதிபதி அரங்கேற்றினாலும் அவரின் பதவிக் காலத்தில் நாட்டினதும் மக்களினதும் நலன் கருதி அவருடன் இணைந்து பயணிக்கவே நாம் விரும்புகின்றோம். ஆனால், அவர் இன்னமும் பொது எதிரணியினரின் கருத்துக்களைத்தான் கேட்டுக்கொண்டு இருக்கின்றார். அவர் சுயபுத்தியுடன் செயற்படுவதே நாட்டுக்கும் அவருக்கும் நல்லது – என்றார். (ஐ)

## அரசை எச்சரிக்கின்றார் அஸ்கிரிய மகாநாயக்கர்

*கொழும்பு, ஜூன் 24*

*ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல்களுடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிந்து அவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதற்கான நடவடிக்கையை முன்னெடுக்காவிட்டால் அரசு மக்களின் அதிருப்தியை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற்படும் என்று அஸ்கிரிய பீட மகாநாயக்க வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் எச்சரித்துள்ளார்.*

*தான் முஸ்லிம் மக்களுக்கு எதிராகக் கருத்துக்களைத் தெரிவித்தார் என வெளியாகிய செய்திகளுக்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில் அவர் விடுத்த விசேட அறிக்கை ஒன்றை விடுத்தார். அதிலேயே இவ்வாறு மேற்கண்டவாறு கூறியுள்ளார்.*

*அவர் அதில் மேலும் தெரிவிக்கையில் -*

*அண்மையில் என்னால் கூறப்பட்ட போதனையை சிலர் தவறாகப் புரிந்து கொண்டு முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். அதன்போது நான் ஐக்கிய தேசியக் கட்சி குறித்தும், முஸ்லிம் மக்கள் குறித்தும் கூறிய விடயங்கள் மக்கள் மத்தியில் அதிகம் பேசுபொருளாகியுள்ளன. எமக்கு அரசின் மீதோ, முஸ்லிம் மக்கள் மீதோ எந்தக் கோபமும் கிடையாது.*

*நாட்டில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் நீண்ட காலமாக ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர். எதிர்காலத்திலும் இதே போன்று அனைவரும் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். இதற்கான உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.*

*மதகுருமார்கள் என்ற ரீதியில் நாட்டையும், மக்களையும், ஆகமங்களையும் பாதுகாப்பதை மட்டுமே எம்மால் செய்ய முடியும். எம்மிடம் எவ்வித கட்சி பேதமோ அல்லது மத பேதமோ கிடையாது - என்றுள்ளது. (ஐ)*

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## அடுத்துக் கெடுக்கும் முயற்சி

வடக்கு, கிழக்கிலும் நாடு முழுவதிலும் மத, மொழி, இன விடயங்கள் மிகவும் உணர்வுபூர்வமாகப் பார்க்கப்படும் ஒரு நெருக்கடியான சூழலில் நாம் இருக்கின்றோம்.

இது பௌத்த, சிங்கள தேசம், இங்கு பௌத்தத்துக்கு மட்டுமே முன்னுரிமை என்ற பேரினவாத மேலாண்மைப் போக்கை இந்த நாட்டின் பெரும்பான்மையினரான சிங்களவர்கள் தீவிரமாகப் பின்பற்றத் தொடங்கியமையும்–

எண்ணிக்கையில் அதிகமானோரின் தீர்மானமே சட்டமும் நீதியுமாகும் என்ற ஜனநாயகத்தின் கேலிக் கூத்தான பண்பியல்பும்–

பேரினவாத கொடுங்கோன்மையின் மைய இடமாக இலங்கைத் தீவை மாற்றி நிற்கின்றமையை இன்று அவதானிக்கின்றோம்.

சுதந்திர இலங்கையின் முதல் அரசமைப்பில் இப்படியான பேரினவாத மேலாண்மை சட்ட ஏற்பாடுகள் – ஷரத்துகள் – இருக்கவில்லை.

மாறாக, சிறுபான்மையினரின் உரிமைகளை ஜனநாயக வாய்ப்புகளைப் பயன்படுத்தி, பெரும்பான்மையினர் கபளீகரம் செய்யாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அந்த அரசமைப்புக் கொண்டிருந்தது.

ஆனால் அந்த அரசமைப்புக்கும் கட்டுப்படாமல் 1972 இல் தன்னிஷ்டப்படி புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வந்தது தென்னிலங்கை.

இந்தத் தீவின் இரண்டாவது பெரிய இனமான தமிழர்களின் பங்களிப்பின்றியும், அவர்களின் விருப்புக்கும் இசைவுக்கும் மாறாகவும் 1972 அரசமைப்பு அவர்கள் மீது வல்வந்தமாகத் திணிக்கப்பட்டது.

அந்தப் புதிய அரசமைப்பில் சிறுபான்மையினரின் உரிமைகள், நலனைப் பேணும் ஷரத்துகள் இருக்கவில்லை. முன்னைய அரசமைப்பில் இருந்த அந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு முரணான வகையில்தான் சிங்களத்துக்கும் பௌத்தத்துக்கும் முன்னுரிமை கொடுக்கும் 1972 அரசமைப்பு கொண்டு வரப்பட்டது.

அதன் தொடராக 1978 இல் கொண்டு வரப்பட்டு தற்போது வரை நடைமுறையில் இருக்கும் அரசமைப்பு உருவாக்கத்திலும் தமிழர்கள் கலந்து கொள்ளவில்லை. அதுவும் கூட தமிழர்கள் மீது, பெரும்பான்மையினரின் முடிவே தீர்ப்பு என்ற ஜனநாயகக் கேலிக் கூத்தின் அடிப்படையில் பலவந்தமாகத் திணிக்கப்பட்டிருக்கின்றது.

இதுதான் எங்கள் இலங்கைத் தீவில் இன மோதல்கள், முரண்பாடுகளின் பின்னணி பற்றிய சிறிய சுருக்கக் குறிப்பு.

இந்தத் தீவில் பௌத்தத்துக்கும், சிங்களத்துக்கும் தான் முன்னுரிமை என்று தெரிவிக்கும் இரண்டு அரசமைப்புக்களைத் தம்மிஷ்டப்படி உருவாக்கி, தமிழர் உட்பட ஏனைய சிறுபான்மையினர் மீது கட்டாயமாக அதைத் திணித்து அவர்கள் மீது பேரினவாத மேலாண்மையைப் பிரயோகித்தபடிதான் இந்தியாவோடு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை 1987 இல் செய்து கொண்டது இலங்கை அரசு.

அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் –

இலங்கைத் தீவில் தமிழினம் தனியான ஓர் இனம் என்பதையும்–

வடக்கு, கிழக்கு பிரதேசம் தமிழர்களின் தனித்துவமான பாரம்பரியத் தாயகம் என்பதையும்–

இலங்கை பன்மொழி, பன்மத, பல்லின, பல் கலாசார நாடு என்பதையும்–

சர்வதேச தளத்தில் ஒப்புக் கொண்டது இலங்கை அரசு.

நீதி, நியாயமான – கௌரவ வாழ்வுக்கான – இழக்கவே முடியாத வாழ்வியல் உரிமைகளுக்காக – உயிர்க் கொடையளித்துப் போராடிய தமிழர்களின் போராட்டத்தை ஆயுத முனையில் தோற்கடித்த பின்னர், தான் முன்னர் ஒப்பமிட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் வாசகங்கள் கொழும்புக்கு அடியோடு மறந்து போய்விட்டன என்பதுதான் துரதிஷ்டம்.

முஸ்லிம்களோடு சேர்ந்து தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை கருவறுத்து, தமிழினத்தை நட்டாற்றில் தவிக்க விட்ட சிங்களம், இப்போது தமிழர்களுடன் சேர்ந்து முஸ்லிம்களைத் தோலுரிக்கும் வேலையைச் செய்ய முனைகின்றது.

இன மேலாண்மையை – மேலாதிக்கத்தை – உறுதிப்படுத்தித் திணிப்பதற்காக எத்தகைய வழிவகைகளையும் நாடத் தென்னிலங்கை தயாராகவே இருக்கின்றது.

சாம, பேத, தான, தண்டம் என்ற அனைத்து வழியையும் அது நாடுகின்றது.

அதில் ஒன்றுதான் அடுத்துக் கெடுத்தல். சேர்ந்து குட்டிச் சுவராக்கும் தீயநோக்கு இலக்கு.

அதற்கு நம்மவர் சிலர் துணை போகின்றமைதான் பெரும் துரதிஷ்டம்.

சிறுபான்மை இனங்கள் ஒன்றுபட்டு நின்று, பேரினவாத ஆக்கிரமிப்பை எதிர்கொள்ளாவிடின் நாம் சிதறிப் போகின்றமை தவிர்க்க முடியாததாக இருக்கும்.

பேரினவாத மேலாதிக்கச் சக்திகளுக்குக் கழுவிக் கொடுக்கும் நம்மவருக்கு இது புரிந்தால் சரி. புரியாவிட்டால் இழப்புத்தான்.

# திருமலைத் துறைமுக அபிவிருத்திக்கு ஜப்பான் 100 கோடி யென் நன்கொடை

## ரணிலிடம் தெரிவித்தார் சிறப்புப் பிரதிநிதி



கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு, ஜப்பான் 100 கோடி யென், நிதியுதவியை வழங்க முன்வந்துள்ளது.

ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபேயின் சிறப்புப் பிரதிநிதியாக, இலங்கை வந்துள்ள ஜப்பானிய பிரதமரின் சிறப்பு ஆலோசகர், கலாநிதி ஹிரோரோ இசுமி, நேற்று முன் தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அலரி மாளிகையில் நடத்திய பேச்சுக்களின்போதே, இந்த நிதியுதவி பற்றி அறிவித்தார்.

இலங்கையை நல்லதொரு நண்பனாக பார்க்கும் ஜப்பான், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால பொருளாதார, கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்வதில் உறுதி பூண்டிருப்பதாக கலாநிதி ஹிரோரோ இசுமி இந்தச் சந்திப்பின்போது கூறினார்.

திருகோணமலைத் துறைமுகத்தை முன்னேற்றுவதற்கு 100 கோடி யென், கொடையை ஜப்பான் வழங்கும் என்றும், ஜப்பானின் கியோடோ நகரைப் போன்று கண்டி நகரத்தை அபிவிருத்தி செய்ய ஜப்பான் உதவும் என்றும் அவர் உறுதியளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, கொழும்பு இலகு ரயில் திட்டம், மத்திய அதிவேக நெடுஞ்சாலை திட்டம், கட்டுநாயக்க அனைத்துலக விமான நிலைய அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ஐ)

# ரயில் சேவைகள் வழமைக்கு

ரயில்வே ஊழியர்கள் இரண்டு நாள்களாக முன்னெடுத்த பணிப் பகிஷ்கரிப்பு நேற்று முன்தினம் நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்துள்ளது.

இந்நிலையில், நேற்று அதிகாலை முதல் ரயில்சேவைகள் வழமை போன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என ரயில்வே கட்டுப்பாட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் லால் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை ஒவ்வொரு வியாழக்கிழமையும் நள்ளிரவு 12 மணி முதல் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணி வரை அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# முஸ்லிம்களுக்கு ஒரு நியாயம் தமிழர்களுக்கு ஒரு நியாயமா?

## கேட்கிறார் அனந்தி சசிதரன்



அம்பாறை, ஜூன் 24

கிழக்கு மாகாணத்தில் பல கல்வி வலயங்களும் பிரதேச செயலகங்களும் நிலத்தொடர்பு அற்ற வகையிலேயே தரமுயர்த்தப்பட்டிருப்பதை நாங்கள் பார்க்கின்றோம். முஸ்லிம்களுக்கு ஒரு நியாயம் தமிழர்களுக்கு ஒரு நியாயம் என பார்க்க முடியாது. இது ஒட்டுமொத்த தமிழர்களுடைய பிரச்சினை.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அனந்தி சசிதரன்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துமாறு கோரி போராட்டம் நடத்தப்படும் இடத்துக்கு நேற்று முன் தினம் சென்றிருந்த அவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

கல்முனை உப பிரதேச செயலகத்தைப் பிரதேச செயலகமாக தரமுயர்த்துமாறு போராட்டத்தை நடத்திவருகின்றனர். 33 ஆயிரம் தமிழ் மக்களையும் வெறுமனே 3000 முஸ்லிம் மக்களையும் கொண்ட 29 கிராமசேவகர் பிரிவைக் கொண்ட இந்தப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் கோரிக்கை 1993 ஆம் ஆண்டுகளிலேயே அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற விடயமாக இருக்கிறது. இன்னுமொரு தடவை அமைச்சரவை அங்கீகாரத்தை பெறவும் தேவையில்லை.

காலத்திற்குக் காலம் மாறி வந்த ஆட்சியாளர்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றாது விட்டமை அவர்களுடைய தவறாகும். நிலத் தொடர்பற்ற முறையில் இதனை அங்கீகரிக்க முடியாது எனச் சொல்வது இலங்கையில் வெறுமனே கல்முனை பிரதேச செயலகத்திற்கு மட்டுமே உரித்தான சட்டமாக இருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் பல கல்வி வலயங்களும் பிரதேச செயலகங்களும் நிலத்தொடர்பு அற்ற வகையிலேயே தரமுயர்த்தப்பட்டிருக்கின்றமை நாங்கள் பார்க்கின்றோம். முஸ்லிம்களுக்கு ஒரு நியாயம் தமிழர்களுக்கு ஒரு நியாயம் என பார்க்க முடி யாது. இது ஒட்டுமொத்த தமிழர் களுடைய பிரச்சினை என்ற அடிப்படையில் நாங்களும் இந்தப் போராட்டத்துக்கு எங்கள் ஆதரவை வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

எனவே, தமிழ்த் தலைமைகள் உடனடியாகக் காலதாமதமில்லாமல் நியாயமான கோரிக்கையை கருத்திற்கொண்டு அரசுக்கு கொடுக்கின்ற ஆதரவை உடன் விலக்கவேண்டும். அதன் மூலம் இந்த அரசு ஆட்சியில் இருக்கமுடியாத நிலை தோற்றுவிக்கப்பட்டால் உடனடியாகக் கல்முனை உப பிரதேச செயலகத்தைப் பிரதேச செயலகமாகத் தரமுயர்த்த முடியும் – என்றார். (ஐ)

### நாளை

25.06.2019
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம்: உத்திரட்டாதி பி.இ 4.21 வரை
திதி : அட்டமி பி.இ 2.3 வரை
இராகுகாலம் : 2.55 – 4.25
சுப நேரம் : 10.25 – 11.55

# அலரிமாளிகைக்கு முன்னால் வெயிலில் காத்திருந்த யாழ்ப்பாண பரீட்சார்த்திகள்





கொழும்பு, ஜூன் 24

பயிலுநர் செயற்திட்ட உதவியாளர் சேவைக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகத் தேர்வுக்கு அலரிமாளிகைக்கு அழைக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 500 பரீட்சார்த்திகள் சுட்டெரிக்கும் வெயிலில் நீண்டவரிசையில் வீதியில் காத்துக் கிடக்கும் நிலை ஏற்பட்டது.

அவர்களுக்குக் குடிதண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்படாதமையால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கினர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பொறுப்பின் கீழ் வரும் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சால், பயிலுநர் செயற்திட்ட உதவியாளர் பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகத் தேர்வில் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இன்றைய தினம் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகத் தேர்வு பிரதமரின் அலுவலகமான அலரிமாளிகையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடக்கும் என்று நேர்முகத் தேர்வு கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதற்கமைய பரீட்சார்த்திகள் முற்பகல் 11 மணிக்கே அலரிமாளிகைக்குச் சென்றிருந்தனர். சுமார் ஆயிரத்து 500 பேர் வரை வீதியில் சுட்டெரிக்கும் வெயிலில் நீண்ட வரிசையில் காத்துக் கிடக்கின்றனர்.

தமக்கு குடிதண்ணீர் உள்ளிட்ட எந்த வசதிகளும் செய்து தரப்படவில்லை என பரீட்சார்த்திகள் தெரிவிக்கின்றனர்.

நேர்முகத் தேர்வுக் கடிதத்தில் குறிக்கப்பட்டிருந்த பிற்பகல் ஒரு மணிக்கு நேர்முகத் தேர்வு ஆரம்பிக்கப்படவில்லை. அதனால் பரீட்சார்த்திகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 24

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்புமற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

கழுவாத்துறை, அராலி ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

நாகபடுவான், முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், குமிழமுனை, 651வதுபடைப்பிரிவுமுகாம், நாச்சிக்குடா கடற்படைமுகாம், இயாஸ்மொகமட்ஜஸ்தொழிற்சாலை ஆகிய இடங் களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

பட்டாணிச்சூர் பகுதியிலும், மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## யாழ் வண்ணார்பண்ணைப் பிரிவில்

# வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள வண்ணார்பண்ணை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற்றிக் கொள்ளலாம் என்றும் இவ் வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக 30 ரூபா செலுத்தப்படவேண்டும் என்றும் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

**அந்த வகையில் இன்று திங்கட் கிழமை -**

* காலை 9 மணி முதல் 11 மணி வரை – முருகமூர்த்தி வீதி.
* முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை – கலைவாணி சனசமூக நிலை யம்.
* முற்பகல் 2.30 மணி முதல் 4.00 மணி வரை – தாமரை வீதி.

**நாளை செவ்வாய்க்கிழமை-**

* காலை 9 மணி முதல் 11 மணி வரை – பெரிய தம்பிரான் வீதி.
* முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை – வள்ளுவன் சனசமூக நிலையம்.
* பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை – கலைமகள் சனசமூக நிலையம் கே.கே.எஸ்.

# முதலீடுகளை மேற்கொள்ள தற்போது நல்ல சந்தர்ப்பம்

## பிரதமர் ரணில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 24

அச்சம், சந்தேகம் இன்றித் தேசிய மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குத் தற்போது நாட்டில் முதலீடுகளை மேற்கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



மொனராகலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

முதலீட்டுக்குத் தடையாக இருந்த குறைவானசெயல்திறன் கொண்ட நிறுவனங்களின் மறுவாழ்வுச்சட்டத்தில் இருந்த குறைபாடுகள் நீக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்த பிரதமர், சம்பந்தப்பட்ட சட்டத்தில் தனிப்பட்ட முதலீட்டாளர்களின் வர்த்தகத்தை அரசு சுவீகரிப்பதற்குச் சந்தர்ப்பம் இருந்ததாகவும், இதனால், இலங்கையில் முதலீட்டை மேற்கொள்வதற்கு முதலீட்டாளர்கள் அச்சம் கொண்டிருந்தனர் எனவும் சுட்டிக் காட்டினார்.

2015ஆம் ஆண்டு தொடக்கம் சமகால அரசு ஆரம்பித்த அபிவிருத்தித் திட்டங்களின் நன்மைகளை தற்போது பொதுமக்கள் பெற்று வருகின்றனர் என பிரதமர் மேலும் கூறினார்.




**அன்பு வாசகர்களுக்கு மகிழ்வான செய்தி....!**

**இப்போது யாழ்ப்பாணத்தில் வெளியாகி, வடக்கு, கிழக்கில் மட்டுமல்லாமல் கொழும்பிலும் இலங்கையின் பிற இடங்களிலும், புலம்பெயர் தேசங்கள் எங்ஙனும் இலங்கை நேரப்படி அதிகாலையில் தினசரி தவறாமல் நாளிதழ் வடிவத்தில் தமிழ் மக்களை எட்டும் ஒரே பத்திரிகை**

**காலைக்கதிர் Kalaikathir**

**'வட்ஸ் - அப்', 'வைபர்', மின்னஞ்சல் மூலம் 'காலைக்கதிர்' நாளிதழை தினசரி இலவசமாகப் பெற்றுக்கொள்வதற்குத் தொடர்பு கொண்ட பல்லாயிரம் வாசகர்களுக்கு அணிகள் அணிகளாகப் பிரித்து அதிகாலையிலேயே அஞ்சல் செய்து வருகிறோம். விண்ணப்பித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளாதோர் அல்லது புதிதாகப் பெற்றுக்கொள்ள விரும்புவோர்**

**kalaikkathirnews@gmail.com**
**என்ற மின்னஞ்சல் மூலம்**
**அல்லது**
**0094 - 21 - 222 3000**
**என்ற தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொள்ளலாம்.**

**புலம்பெயர் தேசத்தில் உள்ள பல்லாயிரம் தமிழ் மக்களையும் உங்கள் 'காலைக்கதிர்' தினசரி அதிகாலை வேளையிலேயே தவறாமல் நாளிதழ் வடிவத்தில் எட்டுவதால், மரண அறிவித்தல், நினைவஞ்சலி உட்பட பிற விளம்பரங்களை மிகக் குறைந்த கட்டணத்தில் பிரசுரிக்க காலைக்கதிரை நீங்கள் நாடலாம்.**

**விளம்பரத் தொடர்புகளுக்கு**
**முகாமையாளர், 'காலைக்கதிர்'**
**தொலைபேசி இலக்கம்**
**0094 - 21 - 222 3000**
**0094 - 776687760**

# ரஷ்ய ஏவுகணை அமைப்பை இந்தியா வாங்கக் கூடாது என அமெ. அழுத்தம்

ரஷ்யாவிடம் இருந்து 'எஸ் 400' ரக ஏவுகணை அமைப்புகளை வாங்குவதைக் கைவிட வேண்டும் என்று அமெரிக்கா மீண்டும் இந்தியாவை வலியுறுத்தி உள்ளது. இந்தியப் பணத்தில் சுமார் 37 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் 'எஸ் 400' என்ற 5 வான்பாதுகாப்பு அமைப்பை ரஷ்யாவிடம் இருந்து வாங்க கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் இந்திய அரசு ஒப்பந்தம் செய்தது.





அந்த ஒப்பந்தத்தை கைவிட வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறையின் மூத்த அதிகாரி வலியுறுத்தி இருக்கிறார் எனத் தகவல் வெளியாகி இருக்கிறது.

'எஸ் 400' ஏவுகணைகளுக்குப் பதில் மாற்று ஆயுதங்களை அமெரிக்காவிடம் இருந்து பெற இதுவே சரியான நேரம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இல்லையெனில் காட்சா (caatsa)சட்டப்படி பொருளாதாரத் தடைகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அமெரிக்க தரப்பு எச்சரித்ததாகச் சொல்லப்படுகிறது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் போம்பியோ அடுத்த வாரம் இந்தியா வர இருக்கும் நிலையில், இந்த விவகாரம் குறித்து இருதரப்பிலும் பேசப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(உ)

# எல்லையில் எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ள இந்திய இராணுவம் தயார்

## ஜம்முவில் உஷார் நிலையை ஆய்வு செய்த பின் தளபதி பிபின் ராவத் அறிவிப்பு

ஜம்மு,ஜூன்24

எல்லைப் பகுதியில் எழக் கூடிய எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளும் வகையில் இந்தியப் படையினர் தயார் நிலையில் இருக்கின்றனர் என இராணுவத் தளபதி பிபின் ராவத் தெரிவித்துள்ளார்.

இராணுவத் தளபதி பிபின் ராவத் நேற்று முன்தினம் காஷ்மீரின் ஜம்மு மாவட்டத்துக்கு உட்பட்ட அக்னூர் எல்லையோர பகுதிகளை ஆய்வு செய்தார். அங்கு பாகிஸ்தானின் அத்துமீறிய தாக்குதல்கள், பயங்கரவாதிகளின் ஊடுருவல் போன்ற பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்வதற்கான பாதுகாப்பு படையினரின் தயார் நிலை உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து அப்போது அவர் ஆய்வு செய்தார்.

இந்தப் பயணத்தின்போது அவர் அங்கு பாதுகாப்பு பணியில் இருக்கும் வையிட் நைட் படைப்பிரிவினருடன் கலந்துரையாடினார். அப்போது அங்கு படையினர் மேற்கொண்டு வரும் பாதுகாப்பு நடவடிக்



கைகள் குறித்து அவருக்கு விளக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து அங்கு பணியில் இருக்கும் வீரர்கள் அனைவரையும் பிபின் ராவத் பாராட்டி உற்சாகப்படுத்தினார்.

பின்னர் அவர் பேசுகையில் எல்லையில் எழும் அனைத்துப் பாதுகாப்புச் சவால்களையும் எதிர்கொள்ளும் வகையில் படையினர் தயார் நிலையில் இருக்கின்றனர் எனத் திருப்தி வெளியிட்டார்.

ராணுவ தளபதியின் இந்த ஆய்வின் போது வடக்குப் பிராந்தியத் தளபதி ரன்பிர் சிங் உடன் இருந்தார்.

# பீகாரில் மூளைக் காய்ச்சலுக்கு இதுவரை 129பேர் பலியாகினர்

முசாபர்பூர்,ஜூன்24

பீகாரில் பரவி வரும் மூளைக் காய்ச்சல் நோய்க்குப் பலியானோர் எண்ணிக்கை 129 ஆக உயர்ந்துள்ளது.



பீகார் மாநிலம் முசாபர் நகரில் மூளைக் காய்ச்சல் நோய் குழந்தைகளிடையே பரவி வருகிறது. கடந்த ஜனவரியில் பரவத் தொடங்கிய இந்நோய் கோடைகாலத்தில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மாதத்தில் 11 பேர் வரை உயிரிழந்தனர். இந்தஎண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து கடந்த சில நாள்களுக்கு முன் 43 ஆக உயர்ந்தது.

பீகாரின் முசாபர்பூர், கயா ஆகிய மாவட்டங்களில் நோய் தாக்கம் அதிக அளவில் உள்ளது. நோய் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளவர்களில் பலருடைய நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

முசாபர்பூர் நகரில் உள்ள மருத்துவமனையில் 109 பேரும், கெஜ்ரிவால் மருத்துவமனையில் 20 பேரும் உயிரிழந்து உள்ளனர். இதனால் பலி எண்ணிக்கை நேற்று 129 ஆக உயர்ந்துள்ளது.

# வாடகை பைக் நிறுவனம் நடத்தி ரூ.1500 கோடி மோசடி செய்தவர்

உத்தரப் பிரதேச மாநிலத்தில், பைக் டாக்சி நிறுவனத்தை நடத்துவதற்காக இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்து இந்தியப் பணத்தில் 1,500 கோடி ரூபா வசூலித்து மோசடி செய்தார் எனக் கூறப்படும் நபர் பொலிஸாரிடம் சிக்கியுள்ளார்.

டெல்லியை அடுத்த நொய்டாவில் Garvit Innovative Pro moters Lt- என்ற நிறுவனம் 2010 உல் தொடங்கப்பட்டு வாடகைக்கு பைக் சேவையை வழங்கி வந்தது.

பைக் போட் (bike bot) என்ற இந்த சேவை டெல்லி, ஜலந்தர் நகரங்கள் உள்பட பல்வேறு மாநிலங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. பைக் டாக்சி நிறுவனம் நடத்த முதலீடு செய்தால் மாதந்தோறும் பத்தாயிரம் ரூபாய் வரை வருமானம் பெற்று தருவதாக விளம்பரங்கள் மூலமாக ஆசை காட்டினார்.

இதனால் ஏராளமானோர் 50 ஆயிரம் ரூபா முதல் 70 ஆயிரம் ரூபா வரை முதலீடு செய்தனர். சுமார் இரண்டு லட்சத்து 25 ஆயிரம் முத லீட்டாளர்களிடம் இருந்து 1500 கோடி ரூபாயை இந்நிறுவனத்தினர் வசூலித்தனர் எனக் கூறப்படுகிறது. ஆனால் வாக்குறுதி அளித்தபடி



யாருக்கும் பணத்தைத் திருப்பித் தரவில்லை.

பைக் போட் சேவைக்காக 7 ஆயிரம் பைக்குகள் வாங்கியுள்ளனர். ஆனால், அதில் 2 ஆயிரம் பைக்குகள் தவிர மற்றவைகளுக்கு பதிவெண் கூட வாங்காமல் இருந்துள்ளனர்.

முதலீட்டாளர்களிடம் மோசடி செய்த பணத்தில் இருந்து 650 கோடி ரூபா வெவ்வேறு கணக்குகளுக்கு மாற்றப்பட்டதாகவும், இந்நிறுவனத்தின் நிர்வாகிகள் அவ்டி, ஜாகுவார், ரோவர் போன்ற 172 சொகுசுக் கார்களை வாங்கி உல்லாசமாக வாழ்ந்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மோசடிப் புகார்கள் எழுந்ததையைத் தொடர்ந்து, பைக்போட் அலுவலகத்தில் பொலிஸார் சோதனை நடத்த சென்ற போது அங்கிருந்த கொம்ப்யூட்டர் உள்ளிட்ட பொருள்களை எரித்துச் சாம்பலாக்கியுள்ளனர். ஆயினும், மூடைகளில் கட்டுக்கட்டாக வைத்திருந்த செக் புத்தகங்கள் உள்ளிட்டவற்றைப் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

நிலைமை எல்லை மீறி விட்ட நிலையில், பைக் போட் நிறுவன உரிமையாளரும், பகுஜன் சமாஜ் கட்சிப் பிரமுகருமான சஞ்சய் பாட்டி (Bhatti) கடந்த 7 ஆம் திகதி சூரஜ்பூர் மாவட்ட நீதிமன்றத்தில் சரண் அடைந்தார். அவரிடமிருந்து 102 பைக்குகள், 8 சொகுசு கார்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்நிலையில் மேலும் ஒருவரை கைது செய்த பொலிஸார், தலைமறைவாக உள்ள நிறுவனத்தின் 5 இயக்குநர்களைத் தேடி வருகின்றனர்.

இந்த சம்பவத்தில் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் பலருக்கும் தொடர்பு இருக்கலாம் என்பதால் பொலிஸார் விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளனர்.

# ஜப்பான் மாநாட்டில் மோடி - டிரம்ப் பேச்சு

## வர்த்தகப் பிரச்சினைகளை ஆராய்வர்



புதுடில்லி, ஜூன்24

ஜப்பானில் ஜி-20 உச்சி மாநாட்டின் போது அமெரிக்க ஜனாதிபதி டிரம்பை இந்தியப் பிரதமர் மோடி சந்தித்து பேசுகிறார். அப்போது இரு தரப்பு வர்த்தக பிரச்சினைகளை எழுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

14 ஆவது 'ஜி-20' உச்சி மாநாடு, ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரத்தில் வரும் 28 ஆம் திகதி தொடங்குகிறது.

இந்த மாநாட்டில் ஆர்ஜென்டீனா, ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, ஐரோப்பிய யூனியன், பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்ஸிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென்னாபிரிக்கா, தென் கொரியா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய 20 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

# ஈரான் மீது இன்று முதல் அமெரிக்கா புதிய தடைகள்

## அதிபர் டிரம்ப் திட்டவட்ட அறிவிப்பு

ஈரான் மீது இன்று முதல் வேறு எந்த நாட்டிற்கும் விதிக்காத கடுமையான புதிய தடைகளை விதிக்கப்போவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஈரான் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட்டு வருவதாகவும் ஒருபோதும் அவர்களால் அணு ஆயுதத்தை தயாரிக்க முடியாது என்றும் தெரிவித்தார்.



அமெரிக்காவின் ஆளில்லாத விமானத்தைசுட்டதையடுத்து, ஈரான் மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டதாகவும் இத் தாக்குதல் நடத்தினால் 150 பேர் வரைக் கொல்லப்படுவார்கள் என்று இராணுவத் தளபதி தம்மிடம் கூறியமையால் தமது முடி வைத் தாம் மாற்றிக் கொண்டார் எனவும் டிரம்ப் அறிவித்தார்.

ஆனால் ஈரான் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

நியூயோர்க்கில் ஏராளமான ஈரானியர்கள் வசிக்கிறார்கள் எனவும், அவர்கள் மகத்தான மனிதர்கள் எனவும் புகழாரம் சூட்டிய டிரம்ப், தமக்கு ஏராளமான ஈரானிய நண்பர்கள் இருக்கின்றனர் எனவும் தெரிவித்தார்.

### கம்போடியாவில் கட்டப்பட்டுக்கொண்டிருந்த

# அடுக்கு மாடிக் கட்டடம் திடீரென இடிந்து விழுந்ததில் எழுவர் சாவு!

## 20 பேர் படுகாயம்; இன்னும் பலரைக் காணோம்

**நொம்பென், ஜூன் 24 கம்போடியாவில் புதிதாகக் கட்டப்பட்டுக் கொண்டிருந்த அடுக்கு மாடிக் கட்டடம் இடிந்து விழுந்த விபத்தில், 7 பேர் உயிரிழந்தனர். கம்போடியா நாட்டின் சிஹானவக்வில்லே என்ற இடத்தில், ஒரு சீன நிறுவனத்துக்காக 7 மாடிகளைக் கொண்ட கட்டடம் ஒன்று கட்டப்பட்டு வந்தது.**



நேற்று முன்தினம் அதிகாலை 5 மணிக்கு கட்டுமானப்பணி நடந்து கொண்டிருந்தபோது, அந்தக் கட்டடம் திடீரென இடிந்து விழுந்தது.

கட்டுமானப்பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் இடிபாடுகளில் சிக்கிக்கொண்டனர். அவர்கள் அலறித்துடித்தனர்.

உடனடியாக சம்பவ இடத்தில் பொக்லைன் இயந்திரங்களுடன் மீட்புப் பணி முடுக்கி விடப்பட்டது. இடிபாடுகளில் சிக்கி 7 பேர் உயிரிழந்து விட்டனர். அவர்களது உடல்கள் மீட்கப்பட்டு விட்டன. 20 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது.

இருப்பினும் இடிபாடுகளுக்கு மத்தியில் இன்னும் பலர் சிக்கிக் கொண்டிருக்கின்றனர் எனவும் அவர்களை மீட்கும் பணி முழு வீச்சில் நடந்து வருவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. சம்பவ இடத்தில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களில் பலரைக் காணவில்லை என அந்த நாட்டின் தகவல் துறை அமைச்சர் கியு கன்ஹாரித் கூறினார். கட்டடம் இடிந்து விழுந்ததன் காரணம் யாது என்பது உடனடியாக தெரிய வரவில்லை.

இது தொடர்பாக சீனப்பெண் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் எனப் பொலிஸார் கூறினர்.

# அமெ. புதிய பாதுகாப்பு அமைச்சராக மார்க் எஸ்பரை நியமித்தார் டிரம்ப்!

வொஷிங்டன், ஜூன் 24 அமெரிக்காவின் புதிய பாதுகாப்பு அமைச்சராக மார்க் எஸ்பரை அந்நாட்டு அதிபர் டிரம்ப் தேர்வு செய்தார்.



வல்லரசு நாடுகளுடன் 2015 ஆம் ஆண்டு ஈரான் செய்து கொண்ட அணு ஆயுத தவிர்ப்பு ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா கடந்த ஆண்டு திடீரென விலகியது. அதைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கும், ஈரானுக்கும் இடையேயான உறவு மிக மோசமாகி வருகிறது.

சமீபத்தில் கூட அமெரிக்காவின் ஆளில்லா உளவு விமானம் ஒன்றை ஈரான் சுட்டு வீழ்த்தியது. அதைத் தொடர்ந்து ஈரானின் 3 இராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் உத்தரவிட்டு, பின்னர் கடைசி நேரத்தில் திரும்பப்பெற்றார்.

இந்த நெருக்கடியான கால கட்டத்தில் இப்போது அமெரிக்காவில் பாதுகாப்பு அமைச்சர் பதவி காலியாக உள்ளது.

பாதுகாப்பு அமைச்சராக இருந்து வந்த ஜிம் மேட்டிஸ் கடந்த ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி பதவி விலகினார். அதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பை வகித்து வந்த பேட்ரிக் ஷனகன் அந்தப் பதவியில் தொடர விரும்பவில்லை.

இந்த நிலையில் புதிய பாதுகாப்பு அமைச்சராக மார்க் எஸ்பர் (வயது 55) என்பவரை ஜனாதிபதி டிரம்ப் தேர்வு செய்தார்.

இவரது நியமனத்துக்கு நாடாளுமன்ற செனட் சபை ஒப்புதல் அளிக்க வேண்டும். செனட் சபையில் குடியரசு கட்சிக்கு பெரும்பான்மை பலம் உள்ளதால் மார்க் எஸ்பர் நியமனத்துக்கு ஒப்புதல் கிடைப்பதில் சிக்கல் ஏதும் இருக்காது என்று கூறப்படுகிறது.

# சீனாவில் தொடருகின்றது நிலநடுக்கம்:19 பேர் காயம்



பெய்ஜிங், ஜூன்24 சீனாவில் மீண்டும் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 19 பேர் காயமடைந்து உள்ளனர்.

சீனாவின் தென்மேற்கே சிச்சுவானில் காங்சியான் கவுண்டி பகுதியில் நேற்று முனதினம் இரவு மித அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. இது 5.4 ஆக ரிக்டர் அளவுகோலில் பதிவானது. இந்நிலையில் சீன அதிகாரிகள் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்டு காயமடைந்தோர் எண்ணிக்கை 19 ஆக உயர்ந்துள்ளது. இன்னும் 11 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை சிச்சுவானின் சாங்னிங் கவுண்டி பகுதியில் 6.0 என்ற அளவிலும், காங் கவுண்டி பகுதியில் 5.1 என்ற அளவிலும் நிலநடுக்கம் பதிவானது. இதில் 13 பேர் வரை கொல்லப்பட்டனர்.

# ஆயுதக்குழுவின் அட்டகாசத்தில் நைஜீரியாவில் 18 பேர் உயிரிழப்பு!

**அபுஜா, ஜூன் 24 நைஜீரியா நாட்டில் ஆயுதக்குழுவினரின் தாக்குதலில் சிக்கி, 18 பேர் உயிரிழந்தனர். நைஜீரியா நாட்டில் ஒரு பக்கம் போகோஹறாம் தீவிரவாதிகள் தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர்.**



இன்னொரு பக்கம் அங்கு பிற ஆயுதக்குழுவினரின் தாக்குதல் அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் அங்கு ஜம்பாரா மாகாணத்தில், மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆயுதக்குழுவினர் 50 பேர், 3 சமூகங்கள் மீது காட்டு மிராண்டித்தனமான தாக்குதல்கள் நடத்தினர்.

இந்த தாக்குதல்களில் 18 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். இந்த சம்பவத்தை அந்தப்பகுதியை சேர்ந்த எம்.பி. யான கபீர் மாய் பேலஸ் உறுதி செய்தார்.

ஆயுதக்குழுவினர், 3 சமூகத்தைச் சேர்ந்தவர்களை வீடுகளில் இருந்து வீதிகளுக்கு இழுத்து வந்து கண்மூடித்தனமாக சுட்டுக்கொன்றனர் எனத் தகவல்கள் கூறுகின்றன.

சம்பவப் பகுதியில் பாதுகாப்பற்ற நிலைமை மிகப் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது என முகமது பாவா என்பவர் தெரிவித்தார்.

தாக்குதல் நடத்திய ஆயுதக் குழுவினரை தேடும் பணியைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikathir



# தெற்கு அரசு அரங்கில் முக்கோணப் போட்டி

# இழுபறிப்படும் ரணில் மைத்திரி சகபாடிகள்!

- பனங்காட்டான்



சிங்கள தேசத்தில் முக்கோண அரசியல் போட்டி. மைத்திரியும் ரணிலும் உலகம் சுற்ற மஹிந்த அறுவடைக்குத் தயாராகிறார். ஏமாற்றப்பட்டு எல்லாமிழந்து நிற்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு இப்போது இந்தியப் பிரதமர் மோடியே நம்பிக்கை நட்சத்திரம். அதற்கும் உள்வீட்டுக்குள்ளேயே ஆப்பு வைக்கிறார் எம்.பி ஒருவர்.

இனிவரும் மாதங்கள் – அடுத்து வரும் ஒரு வருட காலம் இலங்கையில் தேர்தல்களின் காலம்.

மாகாண சபைகள், ஜனாதிபதி, நாடாளுமன்றம் ஆகியவற்றுக்கான தேர்தல்கள் வரிசையில் முறைப்படி முதலில் நடைபெற வேண்டியது மாகாண சபைகள் தேர்தல்.

ஒன்பது மாகாண சபைகளுள் ஏழின் ஆயுள்காலம் முடிவடைந்து விட்டதால் அவை இப்போது ஆளுநர்கள் ஆட்சியிலுள்ளன. ஜனாதிபதியின் தனிப்பட்ட தெரிவில் இவர்கள் நியமனமானதால், ஏழு மாகாண சபைகளும் பொம்மை ஆட்சியிலுள்ளன.

1987ஆம் ஆண்டின் இலங்கை – இந்திய ஒப் பந்தம் வடகீழ் மாகாண சபை உருவாக்கத்துக்கு தற்காலிகமாக வழிவகுத்தது. ஆனால், சிங்கள நீதி நிர்வாகம் அரசமைப்பின் ஓட்டையை பயன்படுத்தி அதனை இரண்டாகப் பிரித்தது.

வடமாகாண சபைக்கான முதலாவது தேர்தல் 26 ஆண்டுகளின் பின்னர் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் நடைபெற்று, கடந்தாண்டு ஒக்ரோபரில் ஆயுளை முடித்துக் கொண்டது.

ஏழு மாகாணங்களுக்குமான தேர்தல்கள் எப்போது என்று எவருக்குமே தெரியாது.

இந்தாண்டின் நவம்பர் – டிசெம்பர் மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும். நாடாளுமன்றத் தேர்தல் அடுத்தாண்டு ஜூலை – ஓகஸ்ட் முற்பகுதிக்குள் இடம்பெற வேண்டும். ஜனாதிபதி விரும்பினால் அடுத்தாண்டில் வரும் முதல் ஆறு மாதங்களுக்குள் எப்போது வேண்டுமானாலும் இதற்கான தேர்தலை நடத்த சட்டத்தில் இடமுண்டு.

பெயரளவில் நல்லாட்சி என்ற இரு கட்சி இணைந்த அரசாங்கமே 2015 முதல் செயற்பாட்டில் இருந்தாலும், ஜனாதிபதியும் பிரதமரும் ஒரே அணியில் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருந்தாலும் இவர்கள் இருவரும் இப்போது ஒருவரையொருவர் முகம் பார்ப்பதில்லை. இதனால், பாதுகாப்புச் சபை கூட்டங்கள், அமைச்சரவைக் கூட்டங்கள் என்பன

> ஜனாதிபதியும் பிரதமரும் இரு துருவங்களாக இருந்தால், மற்றைய முஸ்லிம் அமைச்சர்களும் மெல்ல மெல்ல மீண்டும் தங்கள் கதிரைகளில் அமர்வதுகூட பிரதமருக்குத் தெரியாது போகலாம். சிங்கள அரசியல் அரங்கின் முக்கோணப் போட்டியை நுணுக்கமாக அணுகினால் ஒரு விடயம் தெரியவரும்.

ஜனாதிபதியால் பல தடவை தடை செய்யப்பட்டன.

கடந்தாண்டு ஒக்ரோபர் மாதத்தில் பிரதமர் ரணிலை பதவி நீக்கி, தமது முன்னாள் சகாவான மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கி அரசியல் சதிராட்டம் ஒன்றை ஜனாதிபதி மைத்திரி நடத்தினாராயினும், அதில் அவரே முகங்குப்புற விழ நேர்ந்தது.

ஐம்பது நாள்களுக்குப் பின்னர் பிரதமர் கதிரை மீண்டும் ரணில் வசமாக, மஹிந்த திடுதிப்பென எதிர்க்கட்சி தலைவரானார்.

நான்காண்டுகளுக்கு மேல் வரப்பிரசாதமாகக் கிடைத்த எதிர்க்கட்சி தலைவர் பதவியிலிருந்த சம்பந்தன் அப்பதவியை இழந்தார். ஆயினும், அப்பதவிக்கான பங்களாவையும், அரச வாக னத்தையும் அவர் தொடர்ந்து வைத்திருக்கிறார் என சில நாள்களுக்கு முன்னர் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டமையை இங்கு கவனிக்க வேண்டும்.

அரசியற் கதிரைகள் சக்கடத்தாரின் குதிரைபோல இடம்மாறி ஓடிக்கொண்டிருக்கின்றன. அரசியல் அனுபவமும் ஆற்றலுமில்லாத ஜனாதிபதி மைத்திரி தம்மைச் சுற்றி நரி வலைகளை அமைத்து நாடகமாடிக் கொண்டிருக்கிறார்.

இப்போது மஹிந்தவும் இவரோடு இல்லை, ரணிலும் இல்லை. தனியான அஞ்சலோட்டத்தில் இவர்.

இதிலொன்று, சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தி தமக்குரிய செல்வாக்கை மதிப்பீடு செய்ய நினைப்பது. இதனூடாக ரணிலையும் மஹிந்தவையும் அடித்து வீழ்த்தலாமென நப்பாசை.

இதன் வழியாக நிலைமை சாதகமாகத் தெரிந்தால் ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டியே நடத்துவார். அல்லது நாடாளுமன்றத்தை மக்கள் கருத்துக் கணிப்பை சாதகமாக்கி கலைத்துவிட்டு பொதுத் தேர்தலை முதலில் நடத்துவார்.

## வாய் திறக்க தயங்கும் கூட்டமைப்பு

மொத்தத்தில், மாகாண சபைகளுக்கான தேர்தல் என்பது மூன்றாவது இடத்தில்தான் உள்ளது.

சாம, பேத, தான, தண்டம் என்னும் நான்கையும் பயன்படுத்தி படுதோல்வி கண்ட நிலையிலுள்ள மைத்திரி, அடுத்து என்ன செய்வதென்று தெரியாமலும் புரியாமலும் தடுமாறுவதை உள்நாடு மட்டுமன்றி வெளிநாடுகளும் நன்கு கவனித்து வருகின்றன.

இதனாற்தான் போலும் தலதா மாளிகை (சிங்கள பௌத்த உயர்பீடம் – மகாசங்கம்) சொல்வதையே அனைவரும் செவிமடுத்து அதன்படி செயற்பட வேண்டுமென இவர் விடுத்துள்ள அறிவுரை போன்ற உத்தரவைப் பார்க்க முடிகிறது.



காவி உடைகளை முன்னிறுத்தி அவர்களின் ஆசீர்வாதத்துடனேயே அரசியலை வழிநடத்திய சிங்கள பௌத்த பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவை புத்தரகித்த தேரோவும், சோமராம தேரோவும் என்ன செய்தார்கள் என்பது மைத்திரிபால மறந்திருக்க மாட்டார்.

வீடு பற்றி எரியும்போது அதன் உரித்தாளர்களான கணவனும் மனைவியும் ஊர் சுற்றச் சென்றால் பிள்ளைகள் நிலை எவ்வாறு இருக்கும் என்பதுபோல ஜனாதிபதியும் பிரதமரும் இப்போது நடந்து கொள்கிறார்கள்.

இருவரும் வாராவாரம் வெளிநாடு செல்கிறார்கள். ஒருவர் கிழக்கு நோக்கிச் சென்றால், மற்றவர் மேற்கு நோக்கிச் செல்கிறார். வெளிநாடுகளில்கூட தப்பித் தவறியாவது ஒருவரையொருவர் சந்தித்து விடக் கூடாதென்பதில் மிகுந்த அவதானமாக உள்ளனர். அமைச்சரவை தனித்து ஒரு கட்சி – ஐக்கிய தேசியக் கட்சியினரை மட்டுமே கொண்டதாக இப்போது உள்ளது. ஆனாலும், அவர்கள் தங்களுக்குள் பிணக்குப்படுவது மட்டுமன்றி, ஊடகங்களில் அறிக்கைப் போர் நடத்தி கழுத்தறுப்புச் செய்கிறார்கள்.

ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்கு தலையடுத்து கூண்டோடு அமைச்சர் பதவிகளைத் துறந்த ஒன்பது முஸ்லிம் அமைச்சர்களின் ஒற்றுமையை அனைவருமே பாராட்டினார்கள். சிங்களத் தலைமைகள் இது கண்டு அச்சத்தால் நிலை குலைந்தன.

ஆனால், இவர்களுள் இருவர் பல்டி அடித்து விட்டு முன்னைய அமைச்சர் பதவிகளை மீளப் பெற்று விட்டனர். கபீர் ஹாசீம், எம்.எச்.எம். ஹலீம் என்னும் இவர்கள் இருவரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் மீண்டும் அமைச்சர்களாகியதை விட முக்கியமான விநோதம் என்னவெனில், இவர்களின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க இவர்கள் மீள அமைச்சர்களாகியது தமக்குத் தெரியாதென்று பகிரங்கமாகக் கூறியிருப்பதே.

ஜனாதிபதியும் பிரதமரும் இரு துருவங்களாக இருந்தால், மற்றைய முஸ்லிம் அமைச்சர்களும் மெல்ல மெல்ல மீண்டும் தங்கள் கதிரைகளில் அமர்வதுகூட பிரதமருக்குத் தெரியாது போகலாம்.

சிங்கள அரசியல் அரங்கின் முக்கோணப் போட்டியை நுணுக்கமாக அணுகினால் ஒரு விடயம் தெரியவரும்.

ஒரே அரசாட்சியைச் சேர்ந்த ஜனாதிபதிக்கும் பிர தமருக்கும் எட்டாம் பொருத்தம். ஒருவரையொருவர் சந்திக்க விரும்பாதது மட்டுமல்ல மெதுமெதுவாக காலை இழுக்கும் வேலையையும் செய்கிறார்கள்.

ஆனால், இவர்கள் இருவருக்கும் விரோதியான எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தாம் விரும்பும்போதெல்லாம் ஜனாதிபதியையும் பிரதமரையும் தனித்தனியாகச் சந்தித்து பேச்சு நடத்துகிறார்.

ஜனாதிபதியும் பிரதமரும் வெளிநாடுகளுக்குத் தொடர்ந்து பறந்து கொண்டிருக்கின்றமையால் பொதுமக்கள் தங்கள் தேவைகளுக்குச் சந்திக்கக் கூடிய வராக நாட்டில் இருப்பவர் மஹிந்த மட்டுமே. இதனால் இவரது செல்வாக்கு மக்கள் மத்தியில் அதிகரிப்பது தவிர்க்க முடியாதது.

இனி, தமிழர் அரசியல் பக்கம் சற்றுப் பார்ப்போம்.

இரண்டாவது தடவையாகவும் இந்தியப் பிரதமராகியுள்ள மோடியே இப்போது கூட்டமைப்பின் நம்பிக்கை நட்சத்திரம். புதுடில்லிக்கு வாருங்கள், பேசுவோம் என்ற மோடியின் அழைப்பில் கரைந்து குழைந்து போயுள்ளனர் இவர்கள்.

இன்னமும் திகதி வழங்கப்படவில்லையாயினும் நால்வருக்கு மட்டுமே அழைப்பு என்பதால் சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் அழைப்புத் திகதியை வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கின்றனர். எண்ணிக்கை நான்கு என்பதால் புளொட் சித்தார்த்தன் வெளியே.

இதற்கிடையே கூட்டமைப்பின் எம்.பி.யான சரவணபவன், மோடியால் என்ன பயன் என்று பகிரங்கமாக எழுப்பிய கேள்வி கூட்டமைப்புக்குள் அச்சம் கலந்த பரிதவிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமது உதயன் தினசரிக்கு எதிராக சுமந்திரன் புதிய சுதந்திரனையும், மாவை சேனாதிராசா புதிய ஈழநாதத்தையும் வெளியிட ஆரம்பித்துள்ளதே சரவணபவனுக்கு கூட்டமைப்பின் மீதான கொதிப்பு என்கிறார்கள் உள்வீட்டுக்காரர்கள். இதன் பிரதிபலிப்பே மோடியின் சந்திப்பை நையாண்டி செய்த அவரது கருத்து என்கிறார்கள் இவர்கள்.

ஆனாலும் சரவணபவனிடம் இதுபற்றி விளக்கம் கேட்கவோ, விசாரணை நடத்தவோ சம்பந்தன் தயாரில்லை. (சரவணபவனின் மனைவி வழியாக சம்பந்தனுடன் உறவுண்டு என்றும் கூறப்படுகிறது).

ஏற்கனவே சிவசக்தி ஆனந்தன், வியாழேந்திரன் ஆகிய இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மூன்றாவது ஆளாக சரவணபவனையும் இழக்க கூட்டமைப்பு விரும்பவில்லையாம். தேர்தல்கள் அடுத்தடுத்து வர விருப்பதால் கொஞ்சக் காலத்துக்கு மௌன ராகமே நல்லதென சம்பந்தன் கருதுகிறார்.

நம்பிச் சென்ற பிரதமர் ரணில் நட்டாற்றில் விட்டுள்ளார். வாக்குச் சேர்த்து கதிரையிலேற்றிய ஜனாதிபதி வாலைக் காட்டுகிறார்.

இந்த நெருக்கடிகளுக்குள் புதிய நெருக்கடியை யும் உருவாக்குவதா? வரப்போகும் தேர்தல்களும் இதற்கு மௌனமாகவே பதிலளிக்கும். ★

## அரசியலுக்கு லாயக்கற்ற 90 வீத அரசியல்வாதிகள்!

### ஜனாதிபதி மைத்திரி கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 24
நாட்டில் பத்து வீதமான அரசியல்வாதிகள் மாத்திரமே அரசியலுக்குத் தகுதியானவர்களாக உள்ளனர். எஞ்சிய தகுதியற்ற அரசியல்வாதிகளே அதிகமாக தீய செயல்களில் ஈடுபடுகின்றனர் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்,

இரத்தினபுரி நிவித்திகலை சுமன மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப் படவுள்ள மூன்று மாடி கட்டட நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

வாக்குகளை மாத்திரமே இலக்காகக் கொண்டு செயற்படும் அரசியல்வாதிகளுக்கு நாட்டைப்பற்றி சிறிதளவும் அக்கறை இல்லை. இந்த நாட்டில் எந்த அரசு ஆட்சி அமைத்தாலும் போதைப்பொருள் பாவனையை ஒருபோதும் கட்டுப்படுத்த முடியாது.

நாட்டில் நூற்றுக்கு பத்து வீதமான அரசியல் வாதிகள் மாத்திரமே அரசியலுக்குத் தகுதியானவர்களாக இருக்கின்றனர். எஞ்சிய தகுதியற்ற அரசியல்வாதிகளே அதிகமாக தீய செயல்களில் ஈடுபடுகின்றனர். அவ்வாறான அரசியல் வாதிகளுடன் சேர்ந்து அரச திணைக்களங்களில் பணியாற்றும் அரச அதிகாரிகளும் தீய வழியில் செல்கின்றனர். அரச அதிகாரிகளிலும் நூற்றுக்கு 10 வீதமானவர்களே ஒழுக்கமானவர்களாக உள்ளனர் – என்றார். (ஐ)

# போட்டியிலிருந்து விலகுவார் சிறிசேன?

**கொழும்பு, ஜூன் 24**
**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகிக் கொள்ளக் கூடும் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

கடந்த புதன்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெண்கள் முன்னணி கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, கட்சிக்கும், கட்சியின் ஆதரவாளர்களுக்கும் அநீதி ஏற்படாத வகையில் ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் கௌரவமான முடிவு எடுக்கப்படும் என்று கூறியிருந்தார்.

அத்துடன், மும்முனைப் போட்டிக்கு வாய்ப்பில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே, அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து மைத்திரிபால சிறிசேன விலகிக் கொள்ளக் கூடும் என்றும், எதிர்க்கட்சி வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கக் கூடும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், ஐ.தே.க. முன்னிறுத்தப் போகும் வேட்பாளருக்கும், மஹிந்த ராஜபக்ஷவினால் பெரும்பாலும் களத்தில் இறக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படும் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் நேரடிப் போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## சீனாவிடம் 100 கோடி டொலர் கடன் பெறுகின்றது இலங்கை

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின், ஒரு பகுதியை நிறைவேற்றுவதற்கு, இலங்கை அரசுக்கு 100 கோடி டொலர் கடனை வழங்கச் சீனா முன்வந்துள்ளது.

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் கடவத்த தொடக்கம் மீரிகம வரையான பகுதியை அமைக்கவே சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியே (எக்சிம் வங்கி) இந்தக் கடனுதவியை வழங்கவுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு 100 கோடி டொலர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. இதில், 85 வீதத்தை, சீனாவிடம் கடனாகப் பெறவும், 15 வீதத்தை, உள்நாட்டு வங்கிகளிடம் அரசு திரட்டவும் அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் முதலாவது கட்டமாக, 37.09 கி.மீ தூரமுள்ள பகுதியை அடுத்த ஆண்டு ஜூன் மாதத்துக்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

## நாவாந்துறை காணி விவகாரம்:

# முஸ்லிம் நபரினால் முன்வைக்கப்பட்ட உறுதியை ஆராய்கின்றனர் அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாணம் நாவாந்துறை, பொம்மைவெளியில் சர்ச்சைக்குரிய காணி தொடர்பில் முஸ்லிம் ஒருவரால் காணி உறுதிப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை அடுத்த வாரம் ஆராய்ந்து பதிலளிப்பதாக அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அறியமுடிகின்றது.

எனினும் அந்த முஸ்லிம் நபரால் சமர்ப்பிக்கப்பட்ட காணி உறுதிப்பத்திரம் சரியானதே என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் நாவாந்துறை – பொம்மைவெளியில் முன்னர் மாநகர சபையால் கழிவுகள் கொட்டப்பட்ட காணி இரண்டு எல்லைகள் இடப்பட்டு முஸ்லிம்களால் உரிமை கோரப்படுகிறது. அத்துடன், அந்தக் காணியில் முஸ்லிம்களுக்கான தொடர்மாடிக் குடியிருப்பு, பள்ளிவாசல், முன்பள்ளி என்பன அமைத்து வழங்கப்படும் என்று அண்மையில் இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்திருந்தார்.

அந்தக் காணிக்குள் இறங்கிய நாவாந்துறையைச் சேர்ந்த தமிழ் மக்கள், அதனை அரச காணி எனக் குறிப்பிட்டு தமக்கு பகிர்ந்தளிக்குமாறு கேட்டுக்கொண்டனர். அத்துடன், அவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை அந்தக் காணிக்குள் நுழைந்து எல்லைகள் பிரித்து கயிறுகள் கட்டினர்.

இந்த நிலையில் அந்தப் பகுதிக்கான கிராம அலுவலகர் தலையிட்டு, பிரதேச செயலாளரையும் அழைத்து நாவாந்துறையைச் சேர்ந்த மக்களுடன் பேச்சு நடத்தப்பட்டது. அதேவேளை, முஸ்லிம் நபரொருவரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் இணைந்து நேற்று முன் தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட செயலரைச் சந்தித்தனர். இதன்போது அந்தக் காணி தொடர்பில் தன்னிடம் உள்ள காணி உறுதிப்பத்திரத்தை முஸ்லிம் நபரொருவர் சமர்ப்பித்திருந்தார்.

அந்தக் காணி உறுதிப்பத்திரத்தை ஆராய்ந்த அதிகாரிகள், எல்லைகள் மற்றும் அயல் காணிகள் தொடர்பில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தனர். (ஐ)

# 8 ஆயிரம் வெளிநாட்டவர்களை நாடு கடத்தவுள்ளது இலங்கை

கொழும்பு, ஜூன் 24
நுழைவிசைவு காலாவதியான நிலையில் தங்கியுள்ள 8000 வெளிநாட்டவர்கள் இலங்கையில் இருந்து நாடு கடத்தப்படவுள்ளனர். இதற்குத் தேவையான நிதி மற்றும் ஒழுங்குகளைச் செய்வதற்கு, அமைச்சரவையின் ஒப்புதலை உள்நாட்டு விவகார அமைச்சு கோரவுள்ளது.

ஏப்ரல் 21 தாக்குதலுக்குப் பின்னர், நுழைவிசைவு காலாவதியான பின்னரும், இலங்கையில் தங்கியுள்ள 7900 வெளிநாட்டவர்கள் பற்றிய தரவுகளை குடிவரவுத் திணைக்களத்தின் புலனாய்வு அலகு கண்டறிந்துள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் பசன் ரத்நாயக்க தெரிவித்தார்.

இவர்களில் பெரும்பாலானோர் சுற்றுலா நுழைவிசைவில் வந்தவர்கள். தற்போது விடுதிகள் கட்டுமானத் துறைகளிலும், உணவகங்கள், விவசாயப் பண்ணைகளில் பணியாற்றுவதுடன், வணிக நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர்.

நுழைவிசைவு காலாவதியான பின்னரும் தங்கியிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். குறிப்பாக 1,680 இந்தியர்கள், 936 பாகிஸ்தானியர்கள், 683 சீனர்கள், 291 மாலைதீவு நாட்டவர்கள், 152 பங்களாதேஷ் நாட்டவர்கள், 42 ஜப்பானியர்களும் இதில் உள்ளடங்கியுள்ளனர்.

மேலும், நெதர்லாந்தைச் சேர்ந்த 541 பேரும், உக்ரைனைச் சேர்ந்த 167 பேரும், சவூதி அரேபியாவைச் சேர்ந்த 172 பேரும், ரஷ்யாவைச் சேர்ந்த 157 பேரும், லெபனானைச் சேர்ந்த 157 பேரும், நைஜீரியாவைச் சேர்ந்த 130 பேரும், பிரான்ஸைச் சேர்ந்த 110 பேரும், பிரித்தானியர்கள் 44 பேரும், நுழைவிசைவு காலாவதியான பின்னரும் இலங்கையில் தங்கியுள்ளனர். என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)





# உலகக் கிண்ணத்தில் தோல்வியடையாத அணியாக இந்தியா

இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டியில் இந்திய அணி 11 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்தியா – ஆப்கானிஸ்தான் அணிகள் மோதிய உலகக்கிண்ண தொடரின் 28 ஆவது லீக் போட்டி நேற்று முன் தினம் இடம்பெற்றது. இதில், நாணயச் சுழற்றியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. அதற்கிணங்க, லோகேஷ் ராகுலும் ரோகித் சர்மாவும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர்.

ஆப்கானிஸ்தான் பந்து வீச்சாளர்களின் சிறப்பான பந்து வீச்சினால், ரோகித் சர்மா ஒரு ஓட்டத்திலும் ஏனைய வீரர்கள் குறைவான ஓட்டங்களிலும் ஆட்டமிழந்து வெளியேறினர்.

இந்திய அணி சார்பாக விராட் கோஹ்லி, 67 ஓட்டங்களையும் கேதர் ஜாதவ் 52 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து, 224 ஓட்டங்களை இந்திய அணி பெற்றுக்கொண்டது.

ஆப்கானிஸ்தான் அணி சார்பில் குல்பதின் நயீப், ரஷித் கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதையடுத்து, 225 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆப்கானிஸ்தான் அணி களமிறங்கியது.

இந்த அணி சார்பாக ஹஸ்மதுல்லா மற்றும் அணித்தலைவர் குல்பதின் நயிபும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர்.

இதில், நயிப் 27 ஓட்டங்களுடனும் ஹஸ்மதுல்லா 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து வெளியேறினர்.

இதனையடுத்து களமிறங்கிய வீரர்களும் இந்திய அணியின் சிறப்பான பந்து வீச்சினால் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார்கள். இறுதியில், ஆப்கானிஸ்தான் அணி 49.5 ஓவர்களில், அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது.

இதனால், இந்தியா அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தப் போட்டியில் வெற்றி பெற்றது.


இந்திய அணி சார்பாக ஷமி ஹட்ரிக் விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். மேலும், பும்ரா, சாஹல், பாண்டியா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தனர்.

# ஜொலிக்கும் மைதானங்கள்

2022 ஆம் ஆண்டு உலக கிண்ண உதை பந்தாட்டப் போட்டிகள் கட்டார் நாட்டில் நடைபெறவுள்ளன.

இதற்கான மைதான நிர்மாணிப்பு வேலைகளை கட்டார் அரசு முன்னெடுத்து வருகின்றது.

பார்ப்பதற்கு கண்ணைக் கவரும் விதமாகவும் வியக்கத்தக்க வகையிலும் அமையப் பெற்ற இந்த மைதானங்களில் பல்லாயிரக்கணங்கான ரசிகர்கள் அமர்ந்து போட்டியை பார்வையிடக் கூடிய வசதிகள் காணப்படுகின்றன. சுமார் 08 மைதானங்கள் நிர்மாணிப்பு செய்யப்பட்டு வருவதுடன் அவற்றில் சில திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன் ஏனையவற்றின் நிர்மாணிப்பு பணிகள் நடைபெற்றும் வருகின்றன.









# மயிரிழையில் வெற்றியை தவறவிட்டது மே.தீவுகள்




நியூசிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி மயிரிழையில் வெற்றியை தவறவிட்டுள்ளது.

இந்த போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி கேன் வில்லியம்சனின் அபாரமான சதம் மற்றும் ரோஸ் டெய்லரின் நிதான அரைச்சதம் என்பவற்றின் உதவியுடன் 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 291 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் வில்லியம்சன் 148 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்ததுடன், ஜேம்ஸ் நீஷம் 28 ஓட்டங்களையும், கொலின் டி கிரெண்டோம் 16 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொடுத்தனர்.

மேற்கிந்திய தீவுகளின் பந்துவீச்சை பொறுத்தவரை, செல்டொன் கொட்ரெல் 4 விக்கெட்டுகளையும், கார்லோஸ் ப்ராத்வைட் 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இதனைத் தொடர்ந்து சவாலான வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி ஆரம்பத்தில் வேகமாக ஓட்டங்களை குவித்த போதிலும், மத்திய ஓவர்களில் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

ஆனாலும், பின்னர் களமிறங்கிய கார்லோஸ் பிராத்வைட் அதிரடி சதம் பெற்ற போதும் மேற்கிந்திய தீவுகள் அணி 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவ நேரிட்டது.

சிறப்பாக துடுப்பெடுத்தாடிய கார்லோஸ் பிராத்வைட் 5 சிக்ஸர்கள் மற்றும் 9 பௌண்டரிகள் அடங்கலாக 101 ஓட்டங்களை பெற்றுக்கொடுக்க, நியூசிலாந்து அணியின் பந்துவீச்சில் ட்ரெண்ட் போல்ட் 4 விக்கெட்டுகளையும், லொக்கி பேர்கஸன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

## இன்றைய ஆட்டம்

பங்களாதேஷ் - ஆப்கானிஸ்தான்

பிற்பகல் 3 மணி



## நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு ஊடகங்களின் பங்களிப்பும் முக்கியமானதாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

திருகோணமலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்–

எமக்கான அரசியல் தீர்வைக் காண்பது கஷ்டமான விடயமல்ல. ஆனால் அரசு அதனை விரும்பிச் செய்யவேண்டும். இந்த அரசியல் தீர்வைத் தாமதிக்கவேண்டிய அவசியமும் இல்லை.

ஆனால் இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியாவிட்டால் ஒருபோதும் இந்த நாட்டில் இணக்கத்தை ஏற்படுத்த முடியாது.

இந்தவேளையில், ஊடகங்களுக்கும் பங்களிப்பு இருக்கின்றது. மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகச் சிங்கள, தமிழ் ஊடகங்கள் பங்களிப்புச் செய்யவேண்டும். மக்கள் தங்கள் கருத்தியலைத் தவறாக எடுத்தியம்புவதற்கு ஊடகங்கள் வழிவகுக்கக் கூடாது.

ஒரு நாட்டின் ஜனநாயகம் பேணிப் பாதுகாக்கப்படுவதற்கு நீதிமன்றம் மற்றும் ஊடகங்கள் சுதந்திரமாகச் செயற்பட வேண்டும். ஊடகங்கள் உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

நாட்டைப் பிரிப்பதைத் தவிர்ப்பதற்கு ஒரேயொரு வழி அதிகாரப் பகிர்வேயாகும். அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுவதன் மூலம் நாட்டில் வாழ்கின்ற அனைத்து இன மக்களும் திருப்தியடைவார்களாக இருந்தால் நாட்டைப் பிரிப்பதற்கு வழியிருக்காது.

இந்த செய்தியையும் ஊடகங்கள் தெளிவாக மக்களுக்கு எடுத்துச் செல்லவேண்டும். முக்கியமாக பெரும்பான்மை மக்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டும் – என்றார். (ஐ)

## தமிழர் தீர்வுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

எங்களைப் பொறுத்தவரை 13 ஆவது திருத்தச் சட்டம் ஓர் அடிப்படை. அது தீர்வல்ல. தீர்வு என்பதுசமஷ்டியாகத்தான் இருக்க வேண்டும். ஒருசிலரின் செயற்பாடுகள் காரணமாக ஒட்டுமொத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. எவ்வளவோ விலைகளையும், உயிர்களையும் தீர்வுக்காகக் கொடுத்தவர்கள் நாங்கள். 13 ஆவது திருத்தச்சட்டத்தை இந்தியாவிடம் கோருவதோ அல்லது அதைப் பெறுவதற்கோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது நாங்களோ செயற்படவில்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்துக்குள் முடங்குவதை நாங்கள் ஏற்கவில்லை. இனப்பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு 13 ஆவது திருத்தச் சட்டம் ஓர் அடிப்படை. அது ஒரு அத்திவாரம். தீர்வு என்பது அதற்கும் அப்பால் செல்ல வேண்டும்.

அத்துடன், அண்மையில் இலங்கை வந்த இந்தியப் பிரதமர் மோடியுடன் சந்திக்க எங்களுக்கு 10 நிமிடங்கள் தான் தரப்பட்டது. அதனை உண்மையில் பெருமையான விடயமாக நான் பார்க்கின்றேன். வடக்கு – கிழக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இந்தியாவின் பங்கு இருக்கின்ற படியால் தான் எங்களை அழைத்துச் சந்திக்கக் கூடிய வாய்ப்பு அமைந்திருந்தது.

இந்தியா எங்கள் கரையோர நாடு. இன்று சீனாவின் ஆதிக்கம் இந்த நாட்டில் கூடுதலாக வுள்ளது. இந்தியாவின் பாதுகாப்பு என்பது எங்கள் கரையோரப் பகுதிகளில் தங்கியுள்ளது. இந்தியாவின் பாதுகாப்புடன் பின்னிப் பிணைந்த பகுதியாக வடக்கு – கிழக்கு அமைந்திருக்கின்றது. இந்த நிலையில், எங்கள் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியாவின் பங்கு இருக்க வேண்டும். தீர்வுக்கான முழுமையான பொறுப்புக்கூறலை வழங்க வேண்டும் என்பது எனது கருத்து.

பிரதமர்மோடி அவர்கள் வெற்றி பெற்று குறுகிய நாள்களுக்குள் ஏற்படுத்திய அந்தச் சந்திப்பு மூலம் இந்தியாவுடனான உறவு பலப்படுத்தப்படவேண்டும் என்ற செய்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, நாங்கள் தொடர்ச்சியாக இந்தியப் பிரதமரையும், தமிழ் நாட்டுத் தலைவர்களையும் சந்திப்போம். எங்கள் தொடர்பாக ஓர் எழுச்சியை தமிழ் நாடு கொண்டிருந்தால்தான் டில்லி அரசையும் நல்ல வழிக்குக் கொண்டுவரமுடியும். அந்தவகையில் நாம் தமிழ் நாட்டையும் பயன்படுத்த வேண்டும் – என்றார். (ஐ–100)

## முற்றாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முழுமையாக நிறுத்தினர் .

மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய தற்காலிகமாகப் போராட்டத்தைக் கைவிடுகிறார்கள் எனவும், தமது கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் மீண்டும் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்குவோமென்றும் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

போராட்டத்தைக் கைவிடுவது தொடர்பாக நேற்று முன் தினம் இரவுதொடக்கம் ஏற்பாட்டாளர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். நேற்றுத் தற்காலிகமாகப் போராட்டத்தை கைவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டு, அதற்கான அறிக்கை தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கையை வெளியிட்டு அவர்கள் போராட்டத்தை முடித்துக் கொண்டனர்.

கல்முனையைத் தரமுயர்த்துவதாக அரசியல் பிரமுகர்கள், மதத்தலைவர்கள் வழங்கிய வாக்குறுதிக்கமைவாக தற்காலிகமாக போராட்டத்தைக் கைவிடுகிறார்கள் எனவும், தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் மீண்டும் உண்ணாவிரதத்தில் குதிக்கவுள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் ஞானசார தேரர் போராட்ட களத்துக்கு வந்து, வாக்குறுதியளித்து போராட்டத்தை முடித்து வைத்தார். ஞானசாரரின் வாக்குறுதியையடுத்து நால்வர் போராட்டத்தை கைவிட்டனர். ஒருவர் மாத்திரம் நீராகாரம் அருந்திப் போராட்டத்தில் ஈடுபட்டார். போராட்டத்தைக் கைவிட்ட நால்வரும் வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெற்று விட்டு மீண்டும் நேற்று முன்தினம் மாலையே மீண்டும் போராட்ட இடத்திற்கு வந்தனர்.

இந்தநிலையில் நேற்றுக் காலை அனைவரும் போராட்டத்தை கைவிடுவதாகக் கூட்டாக அறிவித்து, அந்த இடத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

நேற்று மீண்டும் போராட்டம் ஆரம்பித்த பிறகு கல்முனை உண்ணாவிரதிகளைத் தொடர்பு கொண்ட ஞானசார தேரர், தாம் ஒரு வாக்குறுதி தந்த பின்னரும் உண்ணாவிரதத்தைத் தொடர்வது குறித்து கடும் அதிருப்தியை வெளிப்படுத்தி இருந்தார் என அறியமுடிந்தது. ஞானசார தேரரின் அதிருப்தியின் பின்னரே உண்ணாவிரதம் நேற்றுக் காலை முடிவுக்கு வந்ததாக அறியமுடிந்தது. (ஐ)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்று அந்த அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

யாழ். மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் யாழ்ப்பாணம் – காரைநகர் வீதி, கல்லுண்டாய் மூன்று கோவில் பகுதியில் நேற்று நடப்பட்டது.

இந்நிகழ்வில்கலந்துகொண்டு கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி மேலும் தெரிவிக்கையில் –

தேசிய இளைஞர்கள் மன்றத்துக்காக அமைக்கப்படும் இந்தக் கட்டடத்துக்குப் பிரதமரின் கீழான தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், வடக்கு அபிவிருத்தி, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கட்டடம் 5 கோடி ரூபா செலவில் 12 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படுகிறது. இந்தக் கட்டடம் மாவட்டத்தின் இளைஞர்களின் ஆளுமை – திறன்களை விருத்திசெய்வதற்கான பயிற்சி நிலையங்களைக் கொண்டதாக அமைகின்றது.

இளைஞர்களுக்கான பயிற்சி நிலையம், இளையோர் தங்குவதற்கான தங்குமிட வசதிகள், உள்ளக விளையாட்டு அரங்கம், விளையாட்டு மைதானம், அலுவலகக் கட்டடம் உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளுடன் இளைஞர் சேவைகள் மன்றம் இந்தப்பிரதேசத்தில் இயங்கவுள்ளது.

இந்தப் பயிற்சி நிலையத்தில் ஊடாக தகவல் தொழில்நுட்பம், தையல் பயிற்சி, அழகியற்கலை, அலைபேசி திருத்தம், ஜிம், கராத்தே உள்ளிட்ட உடற்பயிற்சிகள் போன்ற பல்வேறு வகையான பயிற்சிகள் இளையோருக்கு வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்திலே 11ஆயிரத்து 450 இளையோர்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் பதிவு செய்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரங்கள், வடக்கு அபிவிருத்தி, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் ஊடாக சுமார் 550 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் நா.வேதநாயகன் மிகவும் உற்சாகமாக ஈடுபட்டுள்ளார். எனவே இந்தக் கட்டடத்தை அமைக்கும் பணிகள் இந்த வருடத்துக்குள் நிறைவு செய்யப்படவேண்டும் – என்றார்.

யாழ். மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இம்மானுவேல் ஆனல்ட், வலி. தென் மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன், அரச அதிகாரிகள், இளைஞர் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

## இந்த அரசிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

அத்துடன் கல்முனை விவகாரத்தைக் காலங்காலமாக வந்த அரசுகள் இழுத்தடிப்புச் செய்து வருவதாகவும், அதே நிலையில் தான் இந்த அரசும் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வவுனியாவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தமிழீழ விடுதலைக் கழகத்தின் பேராளர் மாநாட்டின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த பிரேமதாஸ காலத்தில் இருந்து 30 வருடங்களாக கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகம் உபசெயலகமாக இயங்கினாலும் கூட அதனைத் தரமுயர்த்துவதற்கு பல்வேறு தடைகள் போடப்பட்டுக் கொண்டே வந்துள்ளன.

அங்கே இருக்கின்ற முஸ்லிம் சமூகத்தினருக்கு இந்தச் செயலகம் எந்த விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது. எனினும் அதனை ஒரு பிரச்சினையாக எண்ணித் தடை போடுகிறார்கள். அத்துடன் தொடர்ந்து வந்த அரசுகள் கால தாமதத்தை ஏற்படுத்தின.

தற்போதைய அரசும் நாம் பூரண ஆதரவு கொடுத்தும் கூட அதனை செயற்படுத்துவதில் கால தாமதத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கின்றது.

இவ்விடயத்தில் போராடுகின்ற ஏனைய கட்சிகளுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான பூரண ஆதரவை நாங்களும் வழங்குவோம். இதனை நாங்கள் ஒரு தீர்மானமாக எடுத்துள்ளோம் – என்றார். (ஐ)

## மைத்திரி இதுவரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெல்லன்வில ரஜமகா விகாரையில் வைத்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் எனவும், உங்களைப் பிரதமராக நியமிக்கவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றதே என மஹிந்த விடம் ஊடகவியலாளர் ஒருவர் வினவினார்.

அதற்குப் பதிலளித்த அவர் –

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒருபோதும் அவ்வாறான ஒரு கருத்தைத் தெரிவிக்கவில்லை. அவருடன் இருக்கும் கூட்டத்தில், ஒரு சிலர்தான் இவ்வாறு கூறி வருகின்றனர். தான் ஒருமுறை தான் போட்டியிடுவதாகவே மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார் – என்றார். (ஐ)

## முடிவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இப்படிக் கூறினார் மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது பிரதமர் பதவியிலிருக்கும் ரணில், நாட்டுக்கோ அல்லது நாட்டு மக்களுக்கோ எந்த நன்மையையும் செய்யவில்லை.

நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்குத் தாரைவார்த்துக் கொடுத்துள்ள ரணில், அந்த நாடுகளின் இராணுவத்தினரை இங்கு காலூன்றச் செய்துள்ளார்.

2015ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நாட்டை அவர் நாசமாக்கிக்கொண்டே வருகின்றார். இதற்கு முஸ்லிம் கட்சியினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் பேராதரவை வழங்கி வருகின்றார்கள்.

எனவே, இப்படிப்பட்ட ரணிலுக்கும், அவருக்கு ஆதரவு வழங்கி வருவோருக்கும் தேர்தலில் நாட்டு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் – என்றார். (ஐ)

## தமிழரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் தமிழர்களின் பொறுமையும் நல்லெண்ணமும் கிழக்கில் முடிவுக்கு வந்துவிட்டதாக உணர்வதாகவும் அவர் கூறினார்.

ரத்ன தேரரும், ஞானசாரரும் கல்முனை விவகாரத்தில் தலையிட்டுவிட்டார்கள் என இன்று ஒப்பாரி வைப்பவர்கள், இந்த பிரச்சினையை விட்டுக்கொடுப்புடன் சுமுகமாகப் பேசித்தீர்க்கஅப்போதே முன்வந்திருக்கவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இன்று காலம் கடந்து விட்டது. பேச்சுக்குக் குழு நியமனம் என்பதெல்லாம் காலத்தை இழுத்தடிக்கும் செயல்கள் என்பதை கிழக்கில் தமிழர்கள் புரிந்துகொண்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினையில் தமிழ் தரப்பு பக்க நியாயத்தை உணராமல், இந்நாட்டில் எத்தனையோ நிலத்தொடர்பற்ற பிரதேச செயலகங்கள் கண்முன் இருக்கும்போது, நிலத்தொடர்பற்ற என்ற உப்புச் சப்பில்லாத காரணத்தைச் சொல்லி இழுத்தடிப்பவர்கள்தான் தேரர்களின் உள்நுழைவுக்கு காரண கர்த்தாக்கள்.

கிழக்கு மாகாண சபையில் பெரும்பான்மை தம்வசம் இருந்தும், சிறுபான்மைக் கட்சியான முஸ்லிம் காங்கிரஸுக்கு முதலமைச்சர் பதவியைத் தாரை வார்த்து வழங்கிய தமிழர்களின் நல்லெண்ணத்தைப் பற்றி நான் பலமுறை பல இடங்களில் பேசி விட்டேன். ஆனால் இது பற்றி முஸ்லிம் அரசியல் தரப்பில் எவரும் மூச்சுக்கூட விடுவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அன்று சிறுபான்மை முஸ்லிம் காங்கிரஸுக்கு, கிழக்கில் முதலமைச்சர் பதவியை வழங்கியபோது முன் நிபந்தனையாக, இந்த கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைக் கேட்டுவாங்கியிருக்க வேண்டும். அதைச் செய்யக் கூட்டமைப்பு தவறிவிட்டது. இந்நிலையில், தமிழர்களின் பொறுமையும், நல்லெண்ணமும் இன்று கிழக்கில் முடிவிற்கு வந்து விட்டதை உணர்கிறேன் – என்றார். (ஐ)

## மைத்திரி, ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு வலியுறுத்தினார் ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களுக்குப் பொறுப்பேற்று ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகியிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் பதவிகளைத் துறக்காமல் மாறி மாறி தமக்கிடையில் சொற்போரில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இது நாட்டுக்கு அழகல்ல. இருவரும் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துவிட்டார்கள். நாட்டைச் சீரழித்துவிட்டார்கள்.

இருவரினதும் பொறுப்பற்ற செயல்களினால்தான் உயிர்த்த ஞாயிறு தினமன்று அப்பாவி மக்கள் பலர் சாவடைந்தார்கள்.

இவர்கள் இருவரும் பதவியில் இருப்பதற்குத் தகுதியற்றவர்கள். அதேவேளை, அமைச்சர்களும் இவர்கள் மாதிரி பொறுப்பற்ற விதத்தில் செயற்படுகின்றார்கள்.

எனவேதான் ஒட்டுமொத்த அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாம் கொண்டுவந்துள்ளோம். நாட்டின் மீதும் நாட்டு மக்கள் மீதும் அக்கறைகொண்ட அனைவரும் இந்தப் பிரேரணைக்கு ஆதரவு வழங்க வேண்டும் – என்றார். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir



# எம்.பி. பதவியை துறக்கத் தயார்!

## வியாழேந்திரன் அதிரடி

**அம்பாறை, ஜூன் 24 கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தும் விடயத்தில் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யத் தயாராகவுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார். அத்துடன் கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதில் உள்ள பிரச்சினைகள் எனக் கூறப்படும் காரணங்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் கூறினார்.**



கல்முனையில் போராட்டத்தில் ஈடுபட்ட மதத் தலைவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், எஸ்.வியாழேந்திரன் உள்ளிட்டோர் நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மட்டக்களப்பு மத்திய வலயம், வவுனியா தெற்குப் பிரதேச செயலகம் ஆகியன புவியியல் தொடர்பில்லா மலேயே இயங்குகின்றன.

அதேபோல் எண்ணிக்கையில், ஓட்டமாவடி கோரளைப் பற்று மத்திய பகுதியில் 8 கிராம சேவகர் பிரிவுக்கு ஒரு பிரதேச செயலகமும், கோரளைப் பற்று மேற்கு பகுதியில் 8 கிராம சேவகர் பிரிவுக்கு ஒரு பிரதேச செயலகமும் இருக்கின்றன.

ஆனால் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்துக்கு 29 கிராம செயலர் பிரிவுகள் உள்ளபோதும் ஏன் அதனை தரமுயர்த்த முடியாது?

மேலும் கல்முனை வடக்கில் இனத்துவத்தில் 36,000 தமிழ் மக்கள் இருக்கிறார்கள்.

இந்நிலையில், புவியியல் தொடர்பு, எண்ணிக்கையைக் காரணங்காட்டி கல்முனை பிரதேச சபையைத் தரமுயர்த்துவதில் பின்னிற்க இயலாது.

இந்தவேளையில், கல்முனை பிரதேச சபையை தரமுயர்த்துவதற்காக அங்கஜன் இராமநாதன் கூறியதைப் போல், நானும் எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யத் தயாராக உள்ளேன்– என்றார். (ஐ)

# யாழ்ப்பாணத்தில் தொண்டமான்

யாழ்ப்பாணம், ஜூன் 24 இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை நடத்தினார்.



யாழ்ப்பாணத்துக்குவந்த அவர் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

பின்னர் கோவில் வீதியில்உள்ளமுன்னாள்வடக்கு மாகாண முதலமைச்சரும், தமிழ் மக்கள்கூட்டணியின் செயலாளர் நாயகமுமான க.வி.விக்னேஸ்வரனின் இல்லத்துக்குச் சென்று அவருடன் கலந்துரையாடினார்.

இந்தச்சந்திப்பை முடித்துக் கொண்டு அவர் யாழ். இந்திய துணைத் தூதுவர் எஸ்.பாலசந்திரனையும் சந்தித்தார். (ஐ-07)

# யாழ்.மாநகர சபைக்கு புதிய உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 24 யாழ்.மாநகர சபை உறுப்பினர் பதவிக்குஅகில இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவர் புதிதாகப் பதவியேற்கின்றனர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்சார்பில்யாழ்.மாநகரசபைக்கு தெரிவானஅஜந்தாதனபாலசிங்கம் மற்றும் சுகந்தினி சிறிகரன் ஆகிய உறுப்பினர்கள் கடந்த மே மாதம் தமது உறுப்பினர் பதிவியைச் சுய விருப்பில் இராஜினாமா செய்தனர்.

இதையடுத்து இரு வெற்றிடங்களுக்கும் அக்கட்சியின் சார்பில் டெய்சி பிலீப் ஜெய ரஞ்சன், தர்சி பாலவசீகன்ஆகியோரின்பெயர்கள் தேர்தல் ஆணையாளருக்குப் பரிந்துரைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரின் பெயர்களும்வர்த்தமானியில்வெளியிடப்பட்டுள்ளன.

யாழ்.மாநகரசபையின் அடுத்த அமர்வில் இரு உறுப்பினர்களும் சத்தியபிரமாணம் செய்து உறுப்பினர்களாக பதவி ஏற்றுக் கொள்வார்கள். (ஐ)






# மகாநாயக்கர்களை சந்தித்தார் மஹிந்த







கொழும்பு, ஜூன் 24 கண்டியில் நேற்றுத் தலதா மாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மகாநாயக்க தேரர்களை சந்தித்து தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து பேச்சு நடத்தினார். (ஐ)

# கல்முனைப் போராட்டத்துக்கு யாழ்ப்பாணத்திலும் ஆதரவு

யாழ்ப்பாணம், ஜூன் 24 கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தினை தரமுயர்த்தக் கோரி முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கவனவீர்ப்புப் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.



அகில இலங்கை சைவ மகா சபையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் இந்தக் கவன வீர்ப்புப் போராட்டம் நேற்றுப் பிற்பகல் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கலந்துகொண்டு கல்முனை பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துமாறு தமது கோரி கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-07)

# கடலில் நீராடச் சென்ற தந்தையும் இரண்டு மகள்மாரும் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 24 கிரிந்த பகுதியில் கடலில் நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச்சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அந்தக் கடற்கரைக்கு நீராடச் சென்ற தந்தையும் இரு மகள்மாருமே உயிரிழந்தனர். தாய் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### தாய் வைத்தியசாலையில்

இவர்கள் கடலில் நீராடிக் கொண்டிருந்தபோது அலையினால் அடித்துச் செல்லப்பட்டனர். இதன் போதுதந்தையும் ஒரு மகளும் அலையில் சிக்கி உயிரிழந்தனர்.

தாயையும் ஒரு மகளையும் அங்கிருந்தோர் ஆபத்தான நிலையில் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர். இந்நிலையில் மற்றைய மகளும் வைத்தியசாலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

தாயின் நிலைமை மோசமடைந்துள்ளதால் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.06.2019 இல் வெளியிடப்பெற்றது.